Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (02.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 245
















# வடக்கில் 1000 சமுர்த்தி நியமனங்கள்

# அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு பயன்

## சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் திலகசிறி கூறுகிறார்



(கிளிநொச்சி)

வடபகுதியில் இதுவரை ஆயிரம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விடாமுயற்சியும் கடின உழைப்புமே இவர்களின் இந்த நியமனத்தை சாத்தியமாக்கியது என்றும் அவ்வப்போது அமைச்சர் உரிய தரப்புக்களுடன் நியமனம் குறித்து வலியுறுத்திப் பேசியதாலும் தொடர் நடவடிக்கை எடுத்ததன் பயனாகவுமே இந்த நியமனங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் திலகசிறி தெரிவித்தார்.

நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் 178 பேருக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க


## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு யாழில் நேற்று நியமனக் கடிதம்

### அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நியமனம் பெறும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்ற



இந்நிகழ்வில், முன்னதாக நிகழ்விற்கு வருகைதந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சமுர்த்தி பணிப்பாளர் ஆர்.பி.டி.திலகசிறி, யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கமல் உள்ளிட்ட அதிதிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கவுணாவத்தையில் நேற்று வேள்வி 750 ஆட்டுக்கடாக்கள் வெட்டி படையல்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நேற்று அதிகாலை முதல் சுமார் எழுநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடுகள் பலியிடப்பட்டன.

அதிகாலையில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வைரவருக்கு பொங்கி படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெளி மண்டபத்தில் மாமிசப் படையல் செய்யப்பட்டது.

இதில் முட்டைகள், கள்ளு, கருப்பணி போன்றவற்றுடன் உணவு படைக்கப்பட்டு கடா வெட்டப்பட்டு தலையும் படைக்கப்பட்டது. தொடர்ந்து ஏனைய கடாக்கள் வெட்டப்பட்டன.

நேற்று இடம்பெற்ற இந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் கண்காணிக்க வருகிறது ஐரோப்பிய ஒன்றிய குழு

(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் இன நல்லிணக்கம் ஏற்படுத்துவதில், முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறதா என்பதை கண்டறிய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அநேகமாக இந்த ஆண்டின் இறுதியில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் இலங்கை நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவொன்று ஐரோப்பிய நாடாளுமன்றிற்கு விஜயம் செய்திருந்தது.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் இந்தக் குழு விஜயம் செய்திருந்தது. இந்தப் பிரதிநிதிகள் குழுவினர் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முள்ளியவளையில் விபத்து; உடல் நசிந்து குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கு அருகில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றிரவு 7.00 மணியளவில் வித்தியானந்த கல்லூரிக்கு எதிரேயுள்ள மஞ்சள் கடவையில் இருவரும் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் (வயது - 30) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். முள்ளியவளையைச் சேர்ந்த அசோகா குட்டி

(19) ஆம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கு காணிப் பிரச்சினைக்கு ஆணைக்குழுவின் சிபார்சின்படி தீர்வு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வலி.வடக்கு காணி சுவீகரிப்பு பிரச்சினைக்கு தீர்வு காணப்படவிருப்பதாக காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவ தலைமையகத்தை ஏற்படுத்துவதற்காக பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் இருக்கும் 6 ஆயிரத்து 381 ஏக்கர் தனியார் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்த உள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் மேலும் தெரிவித்துள்ளார்.

கையகப்படுத்தப்படும் காணிகளுக்கு, அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி இழப்பீடுகள் வழங்கப்படும். அபிவிருத்தி மற்றும் தேசிய பாதுகாப்புக்காக அரசாங்கத்திற்கு காணிகள் தேவைப்படுவதாகவும் இதில் வடக்கு, தெற்கு என்று பேதங்கள் கிடையாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார். தெற்கில் உள்ள மக்களின் பாரம்பரிய காணிகளை

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலனாய்வு தகவல்களை பரிமாறிக்கொள்ள இணக்கம்

### இலங்கையுடன் தாய்லாந்து ஒப்பந்தம்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் தகவல்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கு தாய்லாந்து பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட தாய்லாந்து பிரதமருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பாதுகாப்பு தொடர்பிலான உறவுகளை விரிவுபடுத்த இவ்விரு அரசியல் தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளனர்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம், முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் இச்சந்திப்பில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த போதிலும், வெளிநாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
பௌதீகவியல்
மாதிரி
வினாத்தாள்

# பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 2011 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களில் நான்கு மாணவர்களான மரின் தர்மிகா, இ.சுபாசினி, அ.வ.அருள் பபில்றாஜ், யே. வெரோணிக்கா ஆகியோர் இவ்வாண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்நான்கு மாணவர்கள் இவ்விதம் பல்கலைக்கழகம் செல்வது பின்தங்கிய பிரதேசத்தில் இயற்கும் இப்பாடசாலையின் வரலாற்றுச் சாதனையாகும். இவர்களைப் பாராட்டி பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பாராட்டு விழா ஒன்றை கடந்த வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தன.

இப்பாராட்டு விழாவிற்கு தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.மகளிர் வித்தியாலய அதிபர் அருட் சகோதரி செ.எலிசெபத் அம்மா சிறப்பு விருந்தினராகவும் கலந்து மாணவர்களை வாழ்த்தினார்கள். அத்துடன் மாணவர்களுக்கு அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டது. (65)

# சிறந்த தலைமைத்துவ பண்புகள் யாழ்.மாணவர்களுக்கு வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தலைமைத்துவ பயிற்சியை பெறுகின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் தலைமைத்துவ பண்பு மிக்கவர்களாக மாற்றமடைய வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தேசிய மாணவர் படையணியின் யாழ்.மாவட்ட அணியின் வருடாந்த நிறைவு நிகழ்வு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றபோது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த முப்பது வருடங்களாக நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் ஒன்றிணைந்து நிகழ்வுகளில் பங்கேற்க முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் இன்று மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களின் முயற்சியின் பயனாக இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களும் ஒன்றிணைந்து நிகழ்வுகளில் பங்கேற்க முடிகின்றது.மிகவும் குறுகிய காலத்தில் யாழ் மாவட்ட மாணவர்களின் திறைமைகளை எடுத்து இயம்புவதாக அவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

எனவே இப்பயிற்சியை பெறுகின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் தலைமைத் துவ பண்பு மிக்கவர்களாக மாற்றமடைய வேண்டும்வடமாண பாடசாலைகளில் குறிப்பாக யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இவ்வாறான பயிற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல நாமும் அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயலாற்ற தயாராகவேயுள்ளோம்.

பாடசாலை மாணவர்களின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகின்ற நாம் இம் மாணவர்களிற்கு இருக்க்க்கூடிய பல்வேறு தேவைகளையும் விரிவாக ஆராந்து அவற்றையும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), 20 ஆவது படையணியின் யாழ் மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் பு.சு.கமகெதர, தேசிய மாணவர் படையணியின் வடமத்திய மாகாண பணிப்பாளர் கேணல் சமரக்கோன், தேசிய மாணவர் படையணியின் மத்திய மாகாண உதவிப் பணிப்பாளர் கேணல் பண்டார, தேசிய மாணவர் படையணியின் மேல் மாகாண பணிப்பாளர் கேணல் தயானந்தசில்வா, தேசிய மாணவர் படையணியின் தென் மாகாண பணிப்பாளர் லெப்.கேணல் பி.கே.டீ.அல்விஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜே/66 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலைய செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக இயங்காது இருந்த இவ்நிலையத்தினை இயங்கவைப்பதற்கர்க வருடாந்தம் முறையாக நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்து இவ்நிலையம் இயங்காமல் இருந்தமையினால் இந்நிலையத்தினை இயங்கவைப்பதற்கான முயற்சியாக இப் பொதுக்கூட்டம் கூட்டப்படவுள்ளது.

இக்கூட்டத்திற்கு விருந்தினராக யாழ்.மாநகரசபை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்துகொள்ளவுள்ளார். (42)

# நயினையில் கோபுர சாந்தி

(நயினாதீவு)

நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தின் வடக்கு வாசலின் திரிதல பஞ்சகலஷ நூதன கோபுரவாசல பெரும் சாந்தி விழா நாளை திங்கட் கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அம்பாள் அடியார்கள் அனைவரையும் கலந்துகொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெறுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (175)

# மஹோற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மஹாமாரி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறு நாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (85)


## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. விற்பனைப்பிரதிநிதிகள் (25 வயதிற்கு உட்பட்டோர்)
2. கணக்கு லிகிதர் (அடிப்படை கணனி அறிவு)

**சன்னதி முருகன்**

(கெஸ்ட்றோல் வட மாகாணத்திற்கான ஏக விநியோகஸ்தர்)

**இல.102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021 222 5202/077 346 5245**

(R/251)

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 157 | திக்தி 2013.05.31

வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள் 04 19 31 32 M (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 11,277,900/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 187 | 187,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 321 | 321,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8191 | 491,460/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4285 | 171,400/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 107301 | 2,146,020/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 15593 | 311,860/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 11,277,900/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,078,740/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 11,488,000/-

2013.06.04ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/2808) web : www.dlb.lk



## ST.JOHN'S COLLEGE, JAFFNA CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA ADMISSION - 2014 FOR GRADE 1, GRAGE 4, GRADE 6, GRADE 10 & A/L

தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10, தரம் 12 இற்கான அனுமதி - 2014

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.07.2013 முதல் 15.07.2013 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ.எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 19.07.2013 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

2. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.

03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஒருபடிவத்திற்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1,000

05. வயதெல்லைகள்:

அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2008 இற்கும் 31.01.2009 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

இ. தரம் 06 விண்ணபத்தாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L) 2016 Batch) விண்ணப்பதாரி 01.02.1997 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 21.09.2013 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங் கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சை யில் சிறந்த பெறுபேறுகள் பெறும், உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 12 இற்கும் (A/L 2016 Batch) தமிழ்/ஆங்கிலம் மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L

2013/14 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 04.01.2014 சனிக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06.01.2014 ஆரம்பமாகும்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ ஆங்கில மொழி மூலம் 2016 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

**அதிபர்கள்.**

(C/2810)



## சிறு விளம்பரம்

**தகவல் தரவும்**

கடந்த 28.05.2013 அன்று வற்றாப் பளை அம்மன் கோயில் வளாகத்தில் நான்கு புடவைப் பொதிகள் தவறவிடப்பட்டு விட்டது. இது பற்றி தகவல் அறிந்தால் 077 6055013 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சம்மானம் வழங்கப் படும். (C/2534)

# மக்களை சிறந்த நெறியில் வழிப்படுத்த இராமாயணகாலத்து அரசர்கள் உதாரணம்

## யாழ். மாநகர முதல்வர்

(யாழ்.நிருபர்)

மக்கள் தங்களை ஆள்பவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு உதாரண புருஷர்களாக விளங்கியவர்கள் இராமாயணகாலத்து அரசர்கள் இராமாயண பாத்திரங்களைப் படிப்பதன் மூலம் மக்களைச் சிறந்தநெறியில் வழிப்படுத்த முடியும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தின் இரண்டாம் நாள் இரவு விழாவிற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா குறிப்பிட்டார்.

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்ற கம்பன்விழாவில் மாநகர சபை முதல்வர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

சிறந்த சிவபக்தனான இராவணன் இலங்காபுரியின் வேந்தனாக விளங்கினான். இலங்கைத் திருநாட்டின் அடையாளம் இராவணன். நல்லியல்புகள் பலவும் நிறைந்த மிகப்பெரிய வீரனாகிய இராவணன் பிறன்மனை விரும்பியதால் அழிந்தான். இது பலருக்கும் ஒரு பாடமாக அமையவேண்டும்.

இலங்கையில் யாழ்ப்பாண மண் கல்விக் கேள்விகளால் நிறைந்த அறிஞர்கள் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மண். இன்று அது பலவற்றையும் இழந்து வெறுமையாகக் கிடக்கிறது.

இராமாயணத்தில் தசரதனின் நகரம் அயோத்தி எப்படி வளம்மிக்க நகராக இருந்ததோ அவ்வாறே சிறப்புற்றிருந்த யாழ்ப்பாணத்தை மீண்டும் வளமுள்ளதாக மாற்றுவோம்.

தசரதன் மக்களின் துன்பங்களைத் தாங்குபவனாக அவர்களின் குறைகளைப் போக்குபவனாக மிகச் சிறந்த அரசனாக விளங்கினான். மக்களை ஆள்பவர் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு உதாரண புருஷனாக விளங்கினான்.

இன்று எமது மக்களிடம் இருக்கின்ற கலை வறுமையைப் போக்குகின்ற தமிழனுடைய பண்பாட்டைப் பறைசாற்றுகின்ற விழாவாக கம்பன்விழா அமைகிறது. இன்றைய இளைஞர்களை நல்வழிப்படுத்தும் விழாவாக அமைகிறது.

நாம் தோற்றுப்போன சமூகம் என்ற மனநிலை யாருக்கும் வரக்கூடாது. நாம் எப்பொழுதுமே விழித்தெழுகிற சமூகம். நாம் அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் ஒளிமயமான வாழ்வை முன்னெடுப்போம் என்றார்.

யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீதர்சனன் கடவுள் வாழ்த்துப் பாடினார். யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தொடக்கவுரை நிகழ்த்தினார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது. (10)

## தொழில்நுட்ப பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின்கீழ் செயற்படும் வைத்தியசாலைகள், நிறுவனங்களில் காணப்படும் தொழில்நுட்ப பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு (பகிரங்க போட்டிப் பரீட்சையின் கீழ்) பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) தரம் III

திட்டமிடல் அலுவலர் தரம் IV

வயது 18 இற்கும் 30 இற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமைகள், உடற்தகுதி, பரீட்சை விபரம், வேதன அளவுத்திட்டம், விண்ணப்பிக்கும் முறைகள் பற்றிய விபரங்களை 31.05.2013 அரச வர்த்தமானியில பார்வையிடலாம். விண்ணபபிக்கும் முடிவு திகதி 28.06.2013 ஆகும். (105)

# வேலியை வெட்டி காணிக்குள் அத்துமீறல் தடுத்து நிறுத்தியது பருத்தித்துறை நீதிமன்றம்

(பருத்தித்துறை)

சட்டவிரோதமாக அத்துமீறி குடியிருப்புக் காணியொன்றுக்குள் வேலியை வெட்டி உட் புகுந்து சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டவர் பொலிஸாரினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டதோடு, அவரால் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகளும் தடுத்து நிறுத்தப்பட்டன.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கிராமமொன்றிலேயே இச்சட்டவிரோத அத்துமீறல் செயல் இடம்பெற்றுள்ளது. இச்சட்டவிரோத அத்துமீறல் செயல்கள் சம்பந்தமாக வீட்டு உரிமையாளர் பொலிஸில் புகார் செய்தார். ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.


இரண்டு பெண்கள் மட்டும் வாழ்ந்துவரும் இவ்வீட்டில் பெண்ணொருவரும் இரண்டு ஆண்களும் சட்ட விரோதமாக அத்துமீறி வேலியை வெட்டி உட்புகுந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற இக்காணி சம்பந்தமான வழக்கில் நீதிபதி இக்காணியின் முழுப்பகுதியிலும் அவ்வீட்டில் வாழ்பவரே உரிமைகொண்டிருக்க உரித்துடையவர் என்று தீர்மானித்தும் பிரகடனம் செய்து கட்டளை இடுவதோடு இத்தீர்வையின் பிரகாரம் காணிக்காரருக்கு ஏதாவது வகையில் தடைசெய்யவோ, குழப்பவோ கூடாதென்றும் தீர்மானித்துக் கட்டளையிடுகின்றேன் என்றும் நிதிபதி தீர்ப்பளித்துள்ளார். (01)



அராலி கிழக்கு ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழாவின்போது அடியார்கள் 1000 பலாப்பழங்கள் வெட்டி பொங்கல் பொங்கி வழிபாடாற்றுவதைக் காணலாம். (180)

## அடையாள அட்டை கண்டெடுப்பு




முடக்காடு நெல்லியடி கிழக்கு கரவெட்டி என்னும் முகவரியை சேர்ந்த செல்வராசா பிரதீபா என்பவரது தேசிய அடையாள அட்டை (925984485 V) கண்டெடுக்கப்பட்டு தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் காரியாலயத்திற்கு வந்து பெற்றுக்கொள்ள முடியும்.

# தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனுக்கு இன்று கற்பூரத் திருவிழா



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கும் வகையில் எழுந்தருளி வீற்றிருக்கும் புனித புண்ணிய தலம் நல்லூராகும்.

நல்லூரிலே இன்று மணவாளக்கோலம். தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனுக்கு கோலாகலமாக நடைபெறுகின்றது கற்பூரத் திருவிழா. அழகே உருவான கந்தப்பெருமான் அடியார்க்கருளும் பெருமானாக இங்கே அருளாட்சி புரிகின்றான். இன்று காலை ஷண்முகப் பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகம்.

பக்திபூர்வமாக நிகழ்கின்ற இந்த சங்காபிஷேகத்தைக் கண்குளிரக் காண்பதற்கு பக்தர்கள் கூட்டம் அலைமோதும். வள்ளி தேவ சேனாதிபதியாக வள்ளல் முருகன் அருட்காட்சி கொடுக்கும் ஆனந்தக் கோலாகலம் அற்புதமானது. இதுு காணக் கண்கோடி வேண்டும்.

ஆறுமுகநாவலர் அவதரித்த இந்த நல்லூரிலே தமிழ் மன்னன் சங்கிலியன் அரசாட்சி புரிந்து செங்கோலோச்சியபோது இந்த இடத்தையே தனது இராசதானியாக அமைத்திருந்தானாம். அப்பேர்ப்பட்ட பெருமை மிக்க நல்லூரிலே முருகனை வணங்குவோர்க்கு எந்தவித கஷ்டமும் வரமாட்டாது. 'எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் துயரமெல்லாம் போமே' என்பது யோகசுவாமிகளின் திருவாக்கு.

ஆகவே, முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற கந்தப்பெருமானுடைய கருணை வெளிப்படுகின்ற இந்த நல்லூர்க் கந்தன் ஆலயத்திலே இன்று மாலை திருக்கல்யாணம் நிகழவுள்ளது. மாப்பிள்ளைக் கோலத்திலே மணவாளனாக முருகன் வீற்றிருக்க இருமருங்கும் வள்ளிதெய்வானையுடனே அழகிய தண்டிகையிலே திருவீதிவலம் வரும் அற்புதக்காட்சி காண்பதற்கு பூர்வஜெனம புண்ணியஞ்செய்திருக்க வேண்டும்.

முன்னே கற்பூரஒளி பிரகாசிக்க அந்த ஒளியிலே கந்தனைக் கண்டு தரிசிக்கும் பொன்னான நாள் இன்றாகும். அலங்காரக் கந்தனைக் கண்ணாரக் கண்டு அவனது அருட்பிரவாகத்திலே மூழ்கித் திளைப்போமாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# மாணவர்களுக்கு இடையூறின்றி ஒலிபெருக்கியைப் பயன்படுத்தவும்

(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவிப்பது தொடர்பான கூட்டம் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் ஆலயக் குருக்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆலயங்களில் ஒலிபெருக்கிப் பாவனையை பாடசாலை மாணவர்கள் கல்வி கற்கும் நேரங்களில் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் ஏனைய நேரங்களில் ஒலிபெருக்கியை கூடுதலான சத்தமின்றி பாவிக்கலாம் என்றும், கூடுதலான ஒலியுடன் பாவித்தால் தங்கள் பகுதி கிராம சேவையாளருக்கோ அல்லது பிரதேச செயலருக்கோ அறிவித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## கணிதப் போட்டியில் முதலிடம்

(சுன்னாகம்)

தீவக கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கணித நாடகப் போட்டி வேலணை மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் காரைநகர் யாழ்ரன் கலலூரி முதலிடத்தைப் பெற்றுக கொண்டது. (66)

விழிப்புடனிருங்கள். உங்கள் விரலிடுக்கில் கூட வாய்ப்புகள் நழுவிப் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வழி எதுவென்று தெரிகிறதா?

தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தரப்போவதில்லை என்று ஆயிரத்தெட்டாவது தடவையாகக் கண்டுபிடித்து அறிவித்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடத்துகின்ற பத்திரிகை.

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வரக்கூடிய சாத்தியங்களுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சட்டியும் பானையும் போன்றே செயற்படுகின்றன. மொத்தத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது கானல்நீர்தான் என்று முத்தாய்ப்பு வைத்திருக்கிறது கூட்டமைப்பின் பத்திரிகை.

சரி, அவர்கள் ஒருபோதும் தரமாட்டார்கள் என்றால் இவர்கள் எதற்குத் தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு உலா வருகிறார்கள்? தீர்வை எடுத்துத் தருவதே ஒரே நோக்கம் என்று வாக்குகளை வாங்கிக் கொண்டவர்கள், தீர்வை எடுப்பதற்குச் செய்துகொண்டிருக்கும் அந்த மகாமுயற்சிகள் என்ன? 2009க்கு முன்பு வரை, அவர்கள் சரிவரமாட்டார்கள் என்ற ராகத்தின் பின்னணியில், "தமிழ்மக்களே தனிநாடுதான் ஒரே வழி பார்த்துக் கொண்டிருங்கள்" என்ற தாளத்தை ஒலிக்கவிட்டுக் கொண்டிருந்தார்கள். 2009க்குப் பிறகு, "சர்வதேசம்தான் ஒரே வழி" என்ற தாளத்தைப் பின்னணியில் ஒலிக்க விட்டுவிட்டுத் தங்கள் கட்சிப் பூசலைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் செத்தபோதும், செத்துக் காடாத்தி நான்கு ஆண்டுகளாகியும் வராத சர்வதேசம் இனி எப்போது வரும்? 13–வது திருத்தமும் இல்லையென்றான பிறகா? கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு வந்து குதிக்கும் எனக் கூட்டமைப்புத் தலைவர் சொல்லிய சர்வதேசம்தான் இப்போதும் இவர்களது சர்வதேசமாக இருக்கிறதா அல்லது வேறேதும் சர்வதேசமா?

கடந்த இரண்டு ஜெனீவா மாநாட்டுக் கோலாகலங்கள் வரை போர்க்குற்ற விசாரணையில் கட்டாயம் மாட்டப்போகிறது இலங்கையரசு என்று சொல்லிவந்த அந்த சமாச்சாரம் என்னவாயிற்று? குற்றவிசாரணைப் பத்திரங்களை இன்னமும் தயாரித்துக் கொண்டிருக்கும் அதே சர்வதேசம்தானா தீர்வை எடுத்துத் தருவதற்கும் வந்துகுதிக்கப் போகிறது? அல்லது அதுவும் வேறு சர்வதேசமா?

சரி, மிஞ்சி மிஞ்சிப் போனால் இன்னும் இரண்டு ஜெனீவா மாநாடுகளின் பின்னர் சர்வதேசம் என்ற "பருப்பை மக்களிடம் அவிக்க" முடியாது போகும். அந்தக் கனவும் கலைந்துபோய்விடும். அதற்குப் பிறகு என்ன? அடுத்த நாலைந்தாண்டுகளுக்கு மக்களை ஏய்க்கக் கூடிய புதுவழி கண்டு சொல்பவருக்குப் பரிசுத்தொகை எவ்வளவு என்று இப்போதே அறிவித்து விடலாமா?

மக்களின் கஷ்டங்களை உணர்வதும் அதை மாற்றுவதன் உடனடி அவசியத்தை யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதும் விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராகுவதுமே நல்ல தலைமைத்துவமாக இருக்க முடியும். மனிதர்கள் தீமைகளாலேயே ஆனவர்களல்ல. இந்த நம்பிக்கைதான், மற்றவர்களோடு உரையாடுவதற்கான நம் வாய்ப்பு. நியாயவுணர்வை, நீதியுணர்ச்சியை, துன்பப்படும் மக்களிடம் பரிவை, மற்றவர் வாழ்வின் மீதுமான அக்கறையை கொண்டிருக்கும் மனிதர்கள் நம்மைச்சுற்றி இருக்கிறார்கள். நம் நேர்மையில் நமக்கு உறுதியிருந்தால், அவர்களின் மனசாட்சியோடு நம்மால் பேச முடியும்.

அரசுகள் தீர்வைத் தராது என்றும், அரசியல்வாதிகளிடம் பேசுவதிலும் பயனில்லை என்று நம்பிக்கை இழந்தவர்கள் தென்னிலங்கை மக்களிடம்தான் செல்ல வேண்டும். அத்றகான எந்த முயற்சிகளும் இல்லாமல், வெறுமனே "இந்த நாட்டுக்குள் எதுவும் சரிவராது, வெளிநாடுகள்தான் ஏதாவது செய்யவேண்டும்" என்று பின்னணி பாடிக்கொண்டிருப்பது எங்கள் வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான வழி அல்ல. - ஆசிரியர்

# இராணுவ தொழில்நுட்ப உதவி இலங்கைக்கு வழங்கப்படும்

## – சீனா வெளியுறவு செய்தித் தொடர்பாளர்

சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான இராணுவ ஒத்துழைப்பு மேலும் வலுப்படும். இதற்கு ஏற்ற வகையில், இலங்கைக்கு இராணுவ தொழில்நுட்பம் வழங்கப்படும். இலங்கை நாட்டு இராணுவ வீரர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும் என சீன அரசின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹாங் லீ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சீன விஜயம் தொடர்பில் சீன அரசின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹாங் லீ, நிருபர்களிடம் பேசும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா 2.2 பில்லியன் டொலர் புதிய கடன் வழங்க முன்வந்துள்ளது.

கண்டியை யாழ்ப்பாணத்துடன் இணைக்கின்ற வகையில் வடக்கு அதிவிரைவு சாலை அமைப்பு பணிக்காக ஒன்றரை பில்லியன் டொலர்கள் (ரூ.8,250 கோடி) முதலீடு செய்ய இலங்கையும், சீனாவும் உடன்பட்டுள்ளன.

தெற்கு ரயில்வேயை விஸ்தரிக்கவும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக வளர்ச்சிக்கும் இரு நாடுகளும் சம்மதித்துள்ளன என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சீனப்பயணத்தின்போது, செயற்கைக்கோள் தகவல் தொழில்நுட்பம், விண்வெளி தொழில்நுட்பம், கடல்சார் தொழில்கள் போன்றவற்றில் இலங்கைக்கு சீனா ஆதரவு தரும் என பிரதமர் லீ கெகியாங் உறுதி அளித்ததாக தகவல்கள் கூறுகின்றன. அதேநேரத்தில் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தங்கள் குறித்த எந்தவொரு தகவலையும் ஹாங் லீ வெளியிடவில்லை.

# இலங்கை - சீனா உறவு; இந்தியாவுக்கு எதிரானதல்ல

## – இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர்

இலங்கையின் உறவினராகவும், நெருங்கிய நண்பனாகவும் இந்தியா இருக்கிறது, சீனாவுடன் அதிகரித்து வரும் இலங்கையின் நெருக்கத்துடன் இதைத் தொடர்புபடுத்தக்கூடாது என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் உரையாற்றிய அவர்,

இது ஒன்றை விட்டுக் கொடுத்து ஒன்றைப் பெறுகின்ற ஆட்டம் அல்ல. இந்தியாவை நாம் ஒரு உறவினராக, நெருங்கிய நண்பனாகவே கருதுகிறோம். நாம் பலமான உறவைக் கொண்டிருக்க வேண்டும். அதேவேளை, சீனாவுடனான உறவுகளும் எமக்கு முக்கியமானது. அது மிகவும் பழமை வாய்ந்த உறவு. அந்த உறவு பிரதானமாக, அபிவிருத்தி வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டது.

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில்தான் சீனா பிரதானமாக, தொடர்புபட்டுள்ளது. சீனாவுடனான உறவுகளை முரண்பாடாகப் பார்க்கக்கூடாது. இன்னொரு நாட்டினால் மேற்கொள்ளப்படும் எந்தத் திட்டமும், மூலோபாய சமநிலை, அமைதி, பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதில் இலங்கை தெளிவாகவே உள்ளது.

இந்தியாவுக்கு பிரச்சினை ஏற்பட்டால், எமக்கும் கூட பிரச்சினை ஏற்படும். இந்தியாவுக்கு அடுத்து நாம் இருக்கிறோம். எனவே, நாம் இந்தியாவுக்கு எதற்காக பிரச்சினையை ஏற்படுத்தப் போகிறோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# திடீரென ஒலித்த சுனாமி சமிக்ஞை புத்தளத்தில் மக்கள் பீதி

புத்தளத்தில் சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரத்தில் ஏற்பட்ட கோளாறால் மக்கள் பீதியடைந்துள்ளனர். புத்தளம் - உடப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரத்தில் இருந்து சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டதால் பிரதேச மக்கள் பீதியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 10.21 இற்கு இரண்டு தடவைகள் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரத்தில் இருந்து சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பெரும் அச்சமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த மக்கள், இதுகுறித்து பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

எனினும், குறித்த சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரத்தில் இருந்து இயந்திரக் கோளாறு காரணமாகவே சமிக்ஞை இயந்திரம் தானியங்கியுள்ளதாக புத்தளம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய பிரதானி ரணவீர தெரிவித்துள்ளார்.

# இரு பல்கலைக்கழக மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் வகுப்புத் தடைக்கு உட்பட்ட மாணவத் தலைவர்களின் பரீட்சை உரிமைக்காக உண்ணாவிரதம் இருந்த நான்கு மாணவர்களில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பம்பகின்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பலாங்கொட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று சனிக்கிழமை சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் பதுளை - பலாங்கொடை வீதி, பம்பயின் முச்சந்தியில் அமர்ந்து தமது போராட்டத்தை விரிவுபடுத்தியுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பரீட்சை தடையைத் தொடர்ந்து அமுல்படுத்த் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் முடிவெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு கோரி கடந்த 28 ஆம் திகதி மேற்படி நான்கு மாணவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மஞ்சள் கோட்டை கடந்த கர்ப்பிணி மோட்டார் சைக்கிள் மோதிக் காயம்

மஞ்சள் கடவையைக் கடக்க முயன்ற கர்ப்பிணிப் பெண் விபத்தில் காயமடைந்துள்ளார்.

வீதியில் மஞ்சள் கடவையை கடக்க முயன்ற கர்ப்பிணிப் பெண்ணொருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த பெண் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, அரசடி சந்தியிலுள்ள மஞ்சள் கோட்டின் ஊடாக வீதியை கடக்க முற்பட்ட பெண் ஒருவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம் பவத்தில் கறுவப் பங்கேணியில் வசித்துவரும் விஜிதா என்பவரே காயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# தமிழ் மக்களை ஏமாற்றும் கைப் பொம்மை அரசியல்

மக்களின் நலனில் அக்கறை உள்ள அரசியல்வாதிகள் ஒருபோதும் மக்களை ஏமாற்றமாட்டார்கள். சுயநலத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசியல்வாதிகள் தான் மக்களை ஏமாற்றி எப்படியாவது தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வார்கள். இப்படியான தலைவர்களால் வழிநடத்தப்படும் மக்களின் பிரச்சினைகள் ஒருபோதும் தீர்வதில்லை. இந்த நிலையிலேயே தமிழ் மக்கள் இன்று வாழ்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தங்கள் சுயநலத்துக்காகத் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நம்ப மறுப்பவர்களுக்குச் சம்பந்தன் இப்போது பதிலளித்திருக்கின்றார். தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டப் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றிய சம்பந்தன், விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு உதவிய நாடுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறினார். கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது என்ற குற்றச்சாட்டு உண்மையானது என்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் இல்லை.

விடுதலைப்புலிகளை அழிக்க உதவிய நாடுகள் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதில் மூன்று உண்மைகள் அடங்கியிருக்கின்றன. இதுவரை எந்தவொரு வெளிநாடும் தீர்வை முன்வைக்கவில்லை என்பது முதலாவது உண்மை. ஏதாவதொரு வெளிநாடு தீர்வை முன்வைக்க வேண்டுமெனக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது என்பது இரண்டாவது உண்மை. தீர்வொன்றைத் தயாரித்து வெளியிடும் நோக்கம் கூட்டமைப்புக்கு இல்லை என்பது மூன்றாவது உண்மை.

சர்வதேச சமூகம் தீர்வுடன் தயாராக நிற்கின்றது என்றும், தேர்தல் முடிந்ததும் தீர்வுத் திட்டத்துடன் இலங்கை அரசாங்கத்தின் கதவைத் தட்டும் என்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது கூட்டமைப்புத் தலைவர்கள் கூறினார்கள். சம்பந்தன் தான் தீவிரமாக இந்தப் பிரசாரத்தை முன்னெடுத்தவர். அப்படிப் பொய் கூறித் தமிழ் மக்களை ஏமாற்றியதை இப்போது அவரே போட்டுடைத்துவிட்டார்.

சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் தீர்வு ஆலோசனையுடன் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்றும், அடுத்த கட்டப் பிரசாரத்தை முன்னெடுத்தார்கள். விடுதலைப்புலிகளை அழிக்க உதவிய நாடுகள் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூறியதன் மூலம், மேற்படி பிரசாரம் பொய்யானது என்பதைச் சம்பந்தன் உறுதிப்படுத்திவிட்டார். ஏற்கனவே, சர்வதேச சமூகத்திடம் தீர்வு இருந்ததென்றால் தீர்வை முன்வைக்குமாறு வேறு நாடுகளைக் கேட்க வேண்டியதில்லையே.

தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் மன்னாரில் சந்தித்து இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வைத் தயாரிப்பதற்காக மூவர் குழுவொன்றை நியமித்தார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவரது கட்சியின் நிபந்தனையை விதித்ததால் அக்குழு செயற்பட முடியவில்லை என்று அந்தக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான சுமந்திரன் கூறுகிறார். இப்போது சம்பந்தன் திருமலையில் தெரிவித்திருக்கும் கருத்து, தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்கும் நோக்கம் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இல்லை என்பதையும் ஏதாவ-தொரு வெளிநாடு தீர்வை முன்வைக்க வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. அப்படியானால் மன்னாரில் மூவர் குழுவை நியமித்தது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பு. அந்தக் குழு ஆலோசனைகளை ஆராய்கின்றது என்று தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான முயற்சி. வடமாகாண சபைத் தேர்தலை மனதில் வைத்தே இந்த ஏமாற்று வேலையைச் செய்தார்கள்.

கூட்டமைப்புத் தலைவர்களால் தாங்கள் எவ்வளவு தூரம் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள் என்பதைத் தமிழ் மக்கள் இப்போதாவது உணர வேண்டும். தேர்தல் முடிந்ததும் சர்வதேச சமூகம் தீர்வை நடைமுறைப்படுத்த நடவடிக்கைஎடுக்கும் என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது கூறியது பொய். சர்வதேச சமூகம் தீர்வு ஆலோசனையுடன் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கத் தயாராக இருக்கின்றது பின்னர் கூறியது பொய். இறுதித் தீர்வைத்தயாரிப்பதற்கு மூவர் குழுவை நியமித்தது மக்களை ஏமாற்றுவதற்கான பம்மாத்து. ஏதாவதொரு வெளிநாடு தீர்வை முன்வைக்கும் என்று காத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை. இலங்கை விவகாரத்தைத் தங்கள் தேசிய நலன்களுக்காகப் பயன்படுத்துவதிலேயே வெளிநாடுகள் அக்கறையாக இருக்கின்றனவேயொழியத் தமிழ் மக்களுக்காகத் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு எந்தவொரு வெளிநாடும் தயாராக இல்லை. கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு இலவு காத்த கிளியின் கதையாகவே முடியும்.

> விடுதலைப்புலிகளை அழிக்க உதவிய நாடுகள் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று சம்பந்தன் கேட்பதில் மூன்று உண்மைகள் அடங்கியிருக்கின்றன. இது வரை எந்தவொரு வெளிநாடும் தீர்வை முன்வைக்கவில்லை என்பது முதலாவது உண்மை. ஏதாவதொரு வெளிநாடு தீர்வை முன்வைக்க வேண்டுமெனக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது என்பது இரண்டாவது உண்மை. தீர்வொன்றைத் தயாரித்து வெளியிடும் நோக்கம் கூட்டமைப்புக்கு இல்லை என்பது மூன்றாவது உண்மை.

■ சங்கர சிவன்



தங்களை நம்பி வாக்களித்த தமிழ் மக்களைக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஏன் இப்படி ஏமாற்றுகின்றார்கள் என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனும் தனக்குள் கேட்டுப் பார்க்க வேண்டும்.

கூட்டமைப்புத் தலைவர்களின் பிரதான இலக்கு நாடாளுமன்றக் கதிரை. அந்தக் கதிரையைக் காப்பாற்றுவதற்காகவே புலிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை எதிர்த்தார்கள். புலிகளின் பதிலிகளாகச் செயற்படும்புலம்பெயர் அமைப்புகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு இப்போது தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதும் அந்தக் கதிரையைக் காப்பாற்றுவதற்காகவே.

புலிகளின் செயலாணையை ஏற்றுச் செயற்பட்ட காலத்தில் புலி ஆதரவுப் புலம்பெயர் அமைப்புகளுடன் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அந்த உறவு இன்றும் தொடர்கின்றது. அது சாதாரண உறவல்ல. புலம்பெயர்அமைப்புகளிடமிருந்து கூட்டமைப்புக்குத் தாராளமாக நிதியுதவி கிடைக்கின்றது. அதேபோல அரசியல் விடயங்களில் ஆணையும் கிடைக்கின்றது. புலம்பெயர் அமைப்புகளை மீறிக் கூட்டமைப்புத் தலைவர்களால் செயற்பட முடியாத நிலை. வடக்கிலிருந்து இராணுவத்தை முழுமையாக வெளியேற்ற வேண்டுமென நாங்கள் கேட்கவில்லை என்று ஒரு சந்தர்ப்பத்தில் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறினார். அவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடாது என்று புலம்பெயர் அமைப்புகள் கட்டளை பிறப்பித்த பின் சம்பந்தன் தனது கருத்தைத் தானே விழுங்கிக் கொண்டார். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பொறுத்த வரையிலும் இதுவே நிலை.

கூட்டமைப்புக்கு நிதியுதவி வழங்கும் புலம்பெயர் அமைப்புகள் இன்னும் தனிநாட்டு மாயைக்குள்ளேயே வாழ்கின்றன. அரசியல் தீர்வு பற்றிப் பேசிக் காலத்தைக் கடத்தலாமேயொழிய அதற்காக உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று சம்பந்தப்பட்ட புலம்பெயர் அமைப்புகள் கூட்டமைப்புத் தலைவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கின்றன. அதன்படியே இவர்கள் நடக்கின்றார்கள். அரசியல் தீர்வு பற்றிப் பேசுகின்றார்கள். அதற்கான எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. குறைந்த பட்சம் அரசியல் தீர்வுக்கான கொள்கைத் திட்டத்தை யாவ்து வெளியிட விரும்பவில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று சொல்லிச் சொல்லியே தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெறுகின்றார்கள். நாடாளுமன்றக் கதிரையைக் காப்பாற்றும் இந்த ஏமாற்று அரசியல் தமிழ் மக்களின் சோக வரலாறாகத் தொடர்கின்றது.

இந்தக் குற்றச்சாட்டைக் கூட்டமைப்புத் தலைமை மறுப்பதாக இருந்தால் அதைச் செயலில் காட்டவேண்டும். வெறும் வார்த்தை ஜம்பம் தேவையில்லை.

ஒவ்வொரு தேர்தலின்போதும் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களை உணர்ச்சிவசப்படுத்தக் கூடிய வகையில் பேசியே காரியம் சாதிப்பது வழக்கம். எந்தக் காலத்திலும் எந்தத் தேர்தலின்போதும் கூட்டமைப்பு நடைமுறைச் சாத்தியமான தீர்வை முன்வைத்ததாக வரலாறு இல்லை.

மாகாண சபைத் தேர்தலுக்காகக் கூட்டமைப்பு தயாராகின்றது. இப்போதே கண்ணீர்க் கதை-களைத் தயாராக வைத்திருப்பார்கள். வழமை போலக் கண்ணீர்க் கதைகளையும் சொல்லட்டும்.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கட்டும். தாங்கள் வெளிச் சக்திகளின் கட்டளைக்குப் பணிந்து செயற்படுபவர்களல்ல என்பதை நிரூபிப்பதற்குச் சுதந்திரமான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமல் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இனியும் கூறுவார்களேயானால் தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைக்கின்றார்கள் என்பதே அர்த்தம்.

> மாகாண சபைத் தேர்தலுக்காகக் கூட்டமைப்பு தயாராகின்றது. இப்போதே கண்ணீர்க் கதைகளைத் தயாராக வைத்திருப்பார்கள். வழமை போலக் கண்ணீர்க் கதைகளையும் சொல்லட்டும். அதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கட்டும். தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமல் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இனியும் கூறுவார்களேயானால் தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைக்கின்றார்கள் என்பதே அர்த்தம்.

# ஐம்பது பேர் அரசியல் தஞ்சம்

(கொழும்பு)

புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 50 பேர் கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களிடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர் என திவயின தெரிவித்துள்ளது. இவர்களில் சில பெண்களும் அடங்குகின்றனர்.

புனர்வாழ்வு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த முன்னாள் புலி உறுப்பினர்கள், மேற்குலக நாடுகளின் தூதரகங்களிடம் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாக பாதுகாப்புத் தரப்பின் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை இவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதற்காக தமிழ் அரசியல்வாதிகள் சிலர், தூதரகங்களுக்கு அறிக்கைகளை வழங்கியிருப்பதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் திவயின கூறியுள்ளது.

# மட்டக்களப்பில் இன நல்லுறவை பாதுகாக்க பாடுபட்டு வருகின்றேன்



## மங்கள ராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரர்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தி இன நல்லுறவை கட்டி வளர்க்க நான் பாடுபட்டு வருகின்றேன் என மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மட்டக்களப்பில் கடந்த 16 வருடங்களாக நான் விகாராதிபதியாக இருந்து இன ஐக்கியத்திற்காகவும், நல்லிணக்கத்திற்காகவும், சமயப் பணி செய்து வருகின்றேன்.

மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்கு வரும் வழியை அடையாளப்படுத்துவதற்காக மட்டக்களப்பு நகர நுழைவாயிலில் அமைந்துள்ள பிள்ளையாரடி பகுதியில் புத்தர் சிலை ஒன்றை நிறுவி விளம்பரப் பலகை ஒன்றைப் போடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதியைக் கேட்டு விண்ணப்பித்தேன்.

அந்த விண்ணப்பத்தை அதன் கொழும்பு தலைமையகத்திற்கு அனுப்பியதுடன், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கும் அனுப்பியுள்ளேன்.

ஆனால், இதுவரைக்கும் அதற்கான எந்த பதில்களோ, அனுமதியோ வரவில்லை. நான் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்கு வரும் வழியை அடையாளப்படுத்துவதற்காகவே அந்த புத்தர் சிலையை வைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

ஆனால் நான் இன்னும் புத்தர் சிலையை வைக்கவில்லை. அதற்கான அனுமதி இன்னும் எனக்கு கிடைக்கவில்லை. இலங்கையில் எங்கும் எவரும் தங்கு தடையின்றி தமது மத வழிபாட்டுத் தளங்களை அமைக்கமுடியும். இலங்கையில் யாரும் மதவழிபாட்டுத் தளங்களை அமைக்கமுடிாயது என கூறமுடியாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மதப்பிரச்சினையை இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தோற்றுவிக்க முயல்கின்றனர்.

அந்த அடிப்படையிலேயே அவர்கள் கடந்த புதன்கிழமையன்று மக்களை பிழையாக வழிநடாத்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். மக்களை பிழையாக வழிநடாத்த வேண்டாமென நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இவர்கள் மக்களை மட்டுமல்ல நீதிமன்றத்தையும் திசை திருப்ப முயசிக்கின்றனர்.

அந்த இடத்தில் புத்தர் சிலையை அமைகக வேண்டாமென பொலிஸாரோ, நீதிமன்றமோ, இராணுவமோ யாருமே என்னிடம் நேரடியா தெரிவிக்கவில்லை.

பொலநறுவையிலிருந்து மட்டக்களப்புக்கு வரும் வழியில் அனைத்து இடங்களிலும் நான் புத்தர் சிலைகளை நிறுவுவேன். நாட்டில் புத்தர் சிலைகளை நிறுவி நாட்டைப்பிடிக்க போகின்றோம் என்று கூறுகின்றனர்.

இது ஒரு பௌத்த நாடு. நாங்கள் நாட்டை பிடிக்க வேண்டிய அவசியமில்லை பௌத்தர்கள் அல்லாத இடத்தில் புத்தர் சிலை எதற்கு எனவும் ஊடகங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளனர்.

அப்படியானால் கண்டி, கரலியத்த உடிஸ்பத்துவ எனும் இடத்தில் இந்து கோவிலுள்ளது அங்கு எத்தனை த[illegible] குடும்பங்கள் உள்ளன. அதே போன்று திகன கெங்கல்ல எனுமிடத்தில் இந்து கோவிலுள்ளது அங்கு எத்தனை தமிழ் குடும்பங்கள் உள்ளன என நான் கேட்க விரும்புகின்றேன். அங்குள்ள கோவில்களை ஒருபோதும் அகற்றுமாறு, நாங்கள் கூறவில்லை.

நான் ஒரு பௌத்தபிக்கு என்ற வகையில் விகாரைகளை அமைப்பது புததர் சிலைகளை வைப்பது மக்களுக்கு நல்ல போதனைகளை செய்வதுதான் எனது வேலை. என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், விகாரை அமைப்பது ஏன்? என்பது பற்றி ஊடகங்களுக்கு சிங்கள மொழியிலும் அறிக்கையொன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

# சிங்கப்பூரில் இலங்கைப் பெண்களை பாலியற்தொழிலில் ஈடுபடுத்தியவர்கள் கைது



(கொழும்பு)

இலங்கைப் பெண்களை பாலியற் தொழிலில் ஈடுபடுத்திய நபர் ஒருவரை' சிங்கப்பூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக இலங்கை யுவதிகளை சிங்கப்பூருக்கு அழைத்துச்சென்று அங்கு அவர்களை பலவந்தமாக பாலியற்தொழிலில் ஈடுபடுத்தி வந்த ஆனமடுவே உபுல் என்பவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சிங்கப்பூரில் சட்ட விரோத பாலியற்தொழிலில் ஈடுபடும் முக்கியஸ்தர்களில் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை ஐந்து பெண்களை அழைத்துச் சென்று பலவந்தமாக பாலியற்தொழிலில் ஈடுபடுத்தியுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இவ்வாறு பலவந்தமாக பாலியற் தொழிலில் ஈடுபட்டு வந்த பெண்கள் தப்பிச் சென்று சிங்கப்பூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிங்கப்பூரில் இலங்கைப் பெண்களை பாலியற் தொழிலில் ஈடுபடுத்தும் மற்றுமொரு நபர் பற்றிய தகவல்களையும் அந்நாட்டுப் பொலிஸார் கண்டபிடித்துள்ளனர்.

அளுத்கம சம்பத் என்பவரே இவ்வாறு இலங்கைப் பெண்களை பாலியற் தொழிலில் ஈடுபடுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் நாடு திரும்பியுள்ளதாக தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாலியற்தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 20 டொலர்கள் மட்டுமே வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# ஐக்கிய நாடுகளின் குழுவுக்கு இலங்கையர் மீண்டும் தெரிவு

(கொழும்பு)

இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் மீண்டும் ஐக்கிய நாடுகளின் புலம்பெயர் பணியாளர் குழுவின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் புலம்பெயர் பணியாளர் குழு, 14 நிபுணர்களை கொண்டது.

இவர்களின் பணிக்காலம் 4 வருடங்களாக இருக்கும். இந்த நிலையில் புலம்பெயர் பணியாளர்களின் நலன்கள் அவர்களின் உறவினர்களது நலன்களுக்கு இந்தக்குழு பொறுப்பாக இருக்கும்.

உலகளாவிய ரீதியில் இன்று 175 மில்லியன் பேர் புலம்பெயர் பணியாளர்களாக உள்ளனர். எனினும் பல்லாயிரக் கணக்கானோர் சட்டவிரோதமாக உலகளாவிய ரீதியில் பணியாளர்களாக உள்ளனர் என்பது புள்ளி விபரங்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

# டெங்கு பரவுவதற்கு உடந்தை: 40 பேருக்கு அபராதம் விதிப்பு



(கொழும்பு)

டெங்கு நுளம்புகள் பரவக் கூடியவாறு சூழலை வைத்திருந்த 40 பேருக்கு கங்கொடவில நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. தலா ஐயாயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸ் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு, டெங்கு ஒழிப்புத் திட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் கல்கிஸ்ஸ மாநகர சபை ஆகிய தரப்பினர் ஒன்றிணைந்து கொஹுவெல பொலிஸ் பிரிவு மேற்கொண்ட நடவடிக்கைகளின்போதே சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக அஜாக்கிரதையுடன் சூழலை வைத்திருந்த 42 பேருக்கு எச்சரிக்கைக் கடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ், நேற்றையதினம் சுமார் ஆயிரத்து 560 வீடுகள் சோதனையிடப்பட்டுள்ளன.

# இலங்கையில் சீரற்ற காலநிலை வெள்ளிக்கிழமை வரை நீடிக்கும்



(கொழும்பு)

இலங்கையின் பல பகுதிகளில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி இம்மாதம் 7 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யூன் மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்கும் இந்த சீரற்ற காலநிலை பெரும் மழையாக இந்து சமுத்திர நாடுகளான தென்னிந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மழைக்காலம் முதலில் கேரளாவில் ஆரம்பித்து படிப்படியாக மற்றப் பகுதிகளுக்குப் பரவும் என்றும் வளிமண்டல ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதனை அமெரிக்காவின் தேசிய காலநிலை சேவைகள் நிலையமும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்தப் பலத்த காற்றுடனான பெருமழை யூன் 7 ஆம் திகதிவரை நீடிக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் காலநிலை வங்காள விரிகுடாவின் ஊடாக கிழக்கு இந்தியாவையும் பாதிக்கும் என்றும் காலநிலை அவதானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், குறித்த காலப்பகுதியில் மழையானது புத்தளம், குருணாகல், மாத்தளை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கும் பரவக்கூடும் என வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இம் மாவடடங்களின் சில பிரதேசங்களில் அதிகளவான மழையாக 100 மில்லி மீற்றர் வரை பெறக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று அவ்வப்போது நாட்டின் மேலாக செல்லக்கூடும் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# கடனட்டைமூலம் நிதிமோசடி; புறக்கோட்டையில் மூவர் கைது



(கொழும்பு)

போலியான கடனட்டைகளைப் பயன்படுத்தி பாரிய நிதி மோசடியில் ஈடுபடத் தயாரான மூன்று பேர் கொழும்பு புறக்கோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையக புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தரப்பு குறிப்பிடுகின்றது.

சந்தேகநபர்களிடம் இருந்து 13 போலி கடனட்டைகள் கைப்பற்றப்பட்டதுடன், வரையறையற்ற கடன் தொகையுடன் அந்த அட்டைகள் தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுபபினர்கள் என்பதுடன், பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படை கூறுகின்றது. மேலதிக விசாரணைகளின் பொருட்டு சந்தேகநபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பூநகரி கொக்குடையான் குளத்தினை மீள நிர்மாணிக்க துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)



பூநகரி கொக்குடையான் மாலாப்பு குளத்தினை நிர்மாணிப்பதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் அமைச்சர் தினேஸ்குணவர்த்தனவின் நிதியொதுக்கீட்டில் சுமார் 100 இலட்சம் ரூபா பெறப்பட்டு விரைவில் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை திட்டம் தொடரபான மேலதிக ஆய்விற்கும் நிர்மாணப்பணியை கண்காணிப்பதற்குமாக மக்கள், பிரதிநிதிகள், அரசஅதிகாரிகள் உள்ளடங்கிய விசேட குழுவும் கடந்த வியாழக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த திட்டத்தினை குறுகிய காலத்திற்குள் ஆரம்பிப்தற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் நிர்மாணப்பணியை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் அன்றைய தினம் பூநகரி பிரதேச விவசாயிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான ஆலோசனைக் கலந்துரையாடலை நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டார். இதில் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளும் உத்தியோகஸ்த்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், பூநகரியில் கொக்குடையான் மாலாப்பு குளத்தினை பாரியளவில் நிர்மாணிப்பதனூடாக இப்பகுதியில் விரையமாகும் நீரைத் தேக்கிவைக்க முடியும். அதனூடாக இப்பகுதியில் நீண்ட காலமாக நிலவி வரும் குடி நீர்மற்றும் விவசாயச் செய்கைக்கான நீர்பற்றாக் குறைகளுக்கும் தீர்வுகாண முடியும். அத்தோடு இக்குளத்தின் கீழ் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் வரையான நெற்செய்கையினையும் மேற்கொள்ளமுடியும். ஆனால் இது ஒரு சாதாரண திட்டமல்ல மிகப்பாரியதிட்டம். சுமார் இரண்டாயிரம் இலட்சத்திற்கும் மேற்பட்ட நிதியை செலவு செய்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம். இதுதொடர்பாக ஆய்விற்கும் முதற்கட்டப்பணிக்குமாக வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் சுமார் 10 மில்லியன் ரூபா மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பில் மக்களும் விழிப்புடன் செயற்பட்டு வெற்றிகரமான திட்ட நடைமுறைக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார். இக்கலந்துரையாடலில் பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்களான இராசலிங்கம் மற்றும் குகேந்திரன் ஆகியோரும் பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், நீர்ப்பாசனத் திணைக்கள பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் கருணானந்தராசா, உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# சித்தமருத்துவ மாநாடும், கண்காட்சி நிகழ்வும்

மாகாண சுதேச மருத்துவத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் சித்த மருத்துவ மாநாடும், கண்காட்சியும் எதிர்வரும் 10, 11, 12 ஆம் திகதிகளில் நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் நடாத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் இத்துறை சார்ந்த தனியார் நிறுவனங்கள் பயனடையும் வகையில் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளதாக திணைக்கள மாகாண ஆணையாளர் டொக்டர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

# வரணி முள்ளி மயானம் புனரமைக்கப்படுமா?

(வரணி)

வரணி வடக்கு முள்ளி மயானத்தின் பழமை வாய்ந்ததான மண்டபதூண்கள் மிகவும் சேதமடைந்துள்ளதால் உடல்களை தகனம் செய்யச்செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழமை வாய்ந்த இம் மண்டபத்தின் ஒரு தூண் விழுந்துள்ள நிலையில் மிகுதி 5 தூண்களும் இன்றோ, நாளையோ என்ற நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை பற்றைகளால் மூடி காட்சிஅளித்திருந்த இம்மயானத்தை இராணுவத்தினரும் பொதுமக்களும் சிரமதானம் மூலம் துப்புரவுப்பணிகளை மேற்கொண்டனர்.

எனினும் இம் மயானத்தை புனரமைத்து தகனக்கிரியைகளை மக்கள் சிரமமின்றி மேற்கொள்ள உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (150)

# அல்லைப்பிட்டி கிழக்கு வீதியை புனரமைக்க நடவடிக்கை



(அல்லைப்பிட்டி)

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை வரை நீண்டு செல்லும் வடக்கு பிரதான வீதியிலிருந்து பழைய அலுமினியத் தொழிற்சாலைக்கு கிழக்குப் பக்கமாக ஊர்மனைக்குச் செல்லும் அல்லைப்பிட்டி கிழக்கு வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இந்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதோடு இந்த வீதியில் உள்ள மதகு ஒன்றும் கடுமையாக சேதமடைந்து பள்ளமாக காணப்படுவதனால். இந்த வீதியால் வாகனங்களின் போக்குவரத்துக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம் பெற்று வந்தது. இந்நிலையில் இப்பகுதி மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழிசமைத்துக் கொடுக்கும் நோக்கோடு புலம் பெயர் அல்லைப்பிட்டி மக்களின் ஒத்துழைப்புடன் வேலணை பிரதேசசபைத் தவிசாளரின் அனுமதியுடன் இவ்வீதியை முழுமையாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உணவக உரிமையாளரின் முன்மாதிரியான செயற்பாடு

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் வீதியில் தவறவிடப்பட்ட ஒரு தொகைப்பணத்தை கண்டெடுத்த உணவக உரிமையாளர் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய நிர்வாக சபையிடம் கையளிக்கப்போவதாக தெரிவித்தார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வரணி மகா வித்தியாலயத்திற்கு அருகில் ஒரு தொகைப் பணத்தை கண்டெடுத்த குறித்த உணவக உரிமையாளர் பல முறை தெரியப்படுத்தியும் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் தான் அப்பணத்தை ஆலயத்திற்கு வழங்க எண்ணியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இப்பகுதியில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் ஒருதொகை பணம், தேசிய அடையாள அட்டை, உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் தவறவிடப்பட்ட நிலையில் குறித்த உணவக உரிமையாளர் இதனை கண்டெடுத்து உரியவரிடம் கையளித்ததாகவும் இவரது முன்மாதிரியான செயற்பாட்டை அப்பகுதி மக்கள் பாராட்டியுள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது. (150)

# பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதியில் இளைஞர் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்கான சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி மேற்கு அளவெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் சுதாகரன் (வயது - 33) என்ற இளைஞரே இவ்வாறு பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானையிலுள்ள கடைக்குள் பொருட்களை எடுக்கச் சென்ற வேளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைக்காலமாக பாம்புக்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# முரசின் இன்றைய பலன்

(02.06.2013 - ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 19 ஆம் திகதி.
நட்சத்திரம் பூரட்டாதி பிற்பகல் 12.28 வரை. திதி - நவமி
பிற்பகல் 04.56 வரை. இராகுகாலம் 04.12 - 05.52 வரை.
சுபநேரம் 08.52 - 10.22 வரை. சித்தாமிர்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முடியாதிருந்த செயல் இலகுவாக முடியும். பிறரை ஊக்கப்படுத்துவீர்கள். தொழிலில் திருப்திகர முன்னேற்றம். உபரி வருமானம். பிள்ளைகள் விரும்பியது வாங்கித் தருவீர்கள். போட்டிருந்த திட்டம் நிறைவேறும் அனுகூலம். |
| ரிஷபம் | பிரிவு ஒன்றினால் மனதில் வருத்தம். தொழில், புதிய வாய்ப்புகள் தவறவிடாமல் பயன்படுத்துவீர்கள். வரவை விட, செலவு கூடும். தாய்வழி உறவால் அனுகூலம். தகவல் ஒன்று மாறி வரும். பதற்றம் வேண்டாம். மாலையில் நிம்மதி. |
| மிதுனம் | உங்களைத் தவறாக விளங்கிக்கொண்டு விமர்சனம் வரும். பெரிதுபடுத்த வேண்டாம். உழைப்பில் கவனம் செலுத்த, நல்லது நடக்கும். தொழில், இடையூறு விலகும். இலாபம் உயரும். அறப்பணிகளில் ஈடுபாடு. பிள்ளைகள் மகிழ்விப்பர். |
| கடகம் | சாதிக்கும் எண்ணம் மேலோங்கியிருக்கும். உறவினர், நண்பர்கள் ஆதரவு தருவர். வீடு, வாகன திருத்தம். தொழில், வசதிகள் பெருகும். எதிர்ப்புகள், போட்டி களை விலக்கி முன்னேறுவீர்கள். அதிக வரவு. வீட்டுப் பொருள் சேகரிப்பு. |
| சிம்மம் | உங்களுக்கு நல்லது நினைப்பவர்களைக் கண்டறிவீர்க்ள். விவேகம் வெளிப்படும். புதுமைகள் படைக்கும் நாள். உயர்ந்தோர் அறிமுகம் கிட்டும். தொழில், நண்பரின் வழிகாட்டுதலால் பயன். குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள். |
| கன்னி | செயல்களில் தடங்கல் ஏற்படும். மனதில் சஞ்சலம். அனுபவசாலி ஆலோசனையால் நன்மை. கடின உழைப்பால் தொழில் வளர்ச்சி. செலவுக்கேற்ற வரவு. வேலையில் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்வது நல்லது. மருத்துவ சிகிச்சை. |
| துலாம் | உங்கள் தனித்திறமை பாராட்டப்பெறும். உற்சாகம், மகிழ்ச்சி. தொழில், மேம்பாட்டிற்கு வாய்ப்புகள் வரும். தாராள பணவரவு. பகட்டிற்காகச் செலவு வேண்டாம். புதிய முயற்சி ஒன்று நிறைவாய் அமையும். இசை ரசித்து மனஅமைதி. |
| விருச்சிகம் | வீண்பிரமைகளால் மனவருத்தம் ஏற்படலாம். பிறர் விஷயத்தில் கருத்து சொல்வதை தவிர்க்கவும். தொழிலில் பொறுமை பலன் தரும். வரவு சுமார். செலவு கூடும். பயணத்திட்டத்தில் மாற்றம். தியானம், வழிபாடு புத்துணர்வு தரும். |
| தனுசு | நண்பர், உறவினர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம். உபரி வருமானம். தான, தர்மத்தில் நாட்டம். எதிர்காலத்திற்கு புதிய திட்டமிடுவீர்கள். உடல் நலம் சீராகும். குடும்பத்தினருடன் அன்பில் திளைப்பீர்கள். |
| மகரம் | தம்பதியருள் இருந்த பிணக்கு நீங்கும். தொழிலில் புதிய தந்திரங்கள் வெல்லும். சக ஊழியரின் ஆதரவு கிடைக்கும். நல்ல இலாபம் வரும். உறவினர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் புதியன கற்பீர்கள். |
| கும்பம் | எடுத்த காரியம் வெல்லும். பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். பொது விஷயங்களில் ஈடுபாடு. சமூகத்தில் உங்கள் பேச்சு எடுபடும். தொழில், புதிய முயற்சிகள் சிறக்கும். தாராள பணவரவு. குடும்ப மகிழ்வு. |
| மீனம் | பொதுப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். சமூக அந்தஸ்து உயரும். தொழில் திட்டமிட்ட அபிவிருத்தி காணும். பணவரவு தாராளம். வெகுநாள் விரும்பியிருந்த பொருள் வாங்குவீர்கள். இல்லறத்துணையின் அன்பு மகிழ்விக்கும். |



# குப்ரில் சதம் வென்றது நியூசிலாந்து

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முத்லாவது ஆட்டம் நேற்று முன்தினம் இங்கிலாந்தின் லோர்ட்ஸ்ட் மைதானத்தில் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, ரிம் சௌத்தி, நதன் மக்கலம் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓட்டங்களைப்பெறுவதில் தடுமாறியதுடன் விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் கப்டன் குக், ட்ரொட், ரூத் ஆகியோர் நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச்சென்றனர். இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குக், ரூத் ஆகியோர் தலா 30, ட்ரொட் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் சௌத்தி மூன்று, நதன் மக்கலம் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 228 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி குப்ரிலின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி 46.5 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் குப்ரில் 103, ரெய்லர் 54 ஓட்டங்களைளப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# இருவர் இராஜினாமா





(புதுடில்லி)

ஐ.பி.எல். சூதாட்டத்தில் சிக்கி இந்திய கிரிக்கெட் சபை அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த பிரச்சினையில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசனுக்கு நெருக்கடி அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியக் கிரிக்கெட் சபையின் செயலாளர் சஞ்சய் ஜீக்தாலே, பொருளாளர் அஜய் ஷிர்கே ஆகியோர் தங்களது பொறுப்புகளை அதிரடியாக இராஜினாமா செய்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட்டில் சமீபத்தில் நடந்த நிகழ்வுகளால் நான் உண்மையிலேயே வேதனைக்குள்ளாகி இருக்கிறேன். புதிதாக வரும் நபர்கள் இந்த விடயத்தை சிறப்பாக கையாள்வதற்கு வசதியாக பதவியை விட்டு விலகுவது என்று முடிவு செய்தேன். மேற்கொண்டு கருத்து ஏதும் கூற விரும்பவில்லை. எனது இராஜினாமா குறித்து கிரிக்கெட் சபைத் தலைவருக்கு முறைப்படி தெரிவித்து விட்டேன் என்று ஜக்தாலே கூறினார். சூதாட்டம் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்டுள்ள 3 பேர் கொண்ட விசாரணை குழுவில் தன்னால் பங்கேற்க இயலாது என்று ஏற்கனவே கூறி விட்டதாகவும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சீனிவாசனுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் பல நிர்வாகிகளும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் காரணமாக சீனிவாசன் விரைவில் முடிவெடுக்கக் கூடிய நிலை உருவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


## வாய் திறக்க வேண்டும் டோனி



ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக கப்டன் டோனி தனது மௌனத்தை கலைத்து கருத்துத் தெரிவிக்க வேண்டும். அவர் நேரடியாக பதில் அளிக்காவிட்டாலும் ஒன்-லைன் மூலம் தனது கருத்துக்களை சொல்லலாம். என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

டோனி இந்த நேரத்தில் கடினமான நிலையை எடுத்துள்ளார். அல்லது அவர் இப்போதைக்கு சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரில் விளையாடுகிறோம். அதில் வெற்றி பெற்று எங்களது உண்மையை நிரூபிப்போம் என்றாவது சொல்லி இருக்கலாம்.

ஏனெனில் ஒவ்வொருவரும் டோனியின் கருத்தை எதிர்பார்க்கிறார்கள். கிரிக்கெட்டில் நடைபெறும் எல்லா தவறுகளுக்கும் கப்டன் பொறுப்பு ஏற்க முடியாது. இந்த விடயத்தில் நான் டோனிக்கு ஆதரவாக இருக்கிறேன். கிரிக்கெட் சூதாட்டத்தை முன்கூட்டியே கண்டு பிடித்து தடுக்க ஐ.பி.எல். நிர்வாகத்தால் ஏன் முடியவில்லை என்று கேட்கிறார்கள். அது எளிதான காரியம் அல்ல. ஒவ்வொரு வீரரையும் என்ன செய்கிறார் என்று கண்காணித்துக்கொண்டு இருக்க முடியாது. ஆனால் கவனமாக இருங்கள் என்று சொல்ல மட்டுமே முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



# மல்யுத்தப் போட்டி மீண்டும் இணைப்பு

(மொஸ்கோ)

2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட மல்யுத்த போட்டிகள் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் போதே இது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து மல்யுத்த போட்டிகளை நீக்குவதற்கு சர்வதேச ஒலிம்பிக் குழு தீர்மானித்தது.எனினும் சர்வதேச மல்யுத்த சம்மேளனம் உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய பலர் இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இதனையடுத்து சர்வதேச ஒலிம்பிக் நிறைவேற்றுக் குழுவக் கூட்டத்தின் போது நடைபெற்ற வாக்கெடுப்பின் போது மல்யுத்தம், ஸ்கொஷ், மற்றும் பேஸ்போல் ஆகிய போட்டிகளுக்கு அதிக வாக்குகள் கிடைத்தன.

இந்நிலை நீக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்ட இந்தப் போட்டிகள் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

# அவுஸ். அணியில் பாகிஸ்தான் வீரர்

(கான்பெர்ரா)

பாகிஸ்தானில் 10 முதல் தரப் போட்டியில் விளையாடியவரான சுழற்பந்து வீச்சாளர் பவாத் அகமது கடந்த 2010ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியா சென்று குடியேறினார். தற்போது அவுஸ்ரேலியாவில் உள்ள விக்டோரியா மாநில அணியில் இடம் பிடித்து உள்ளூர் போட்டியில் விளையாடி வரும் பவாத் அகமதுவுக்கு கடந்த ஏப்ரல் மாதம் முழு நேர ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

ஒருவர் அவுஸ்ரேலியாவில் குடியேறி குறைந்தபட்சம் 4 ஆண்டுகள் நிறைவு பெற்றால் தான் அவுஸ்ரேலிய அணிக்காக விளையாட முடியும். ஆனால் பவாத் அகமது விடயத்தில் அவுஸ்ரேலிய அரசு சலுகை அளிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக அவுஸ்ரேலிய குடியுரிமைச் சட்டத்தில் சிறிது மாற்றம் கொண்டு வர அவுஸ்ரேலிய அரசு முடிவு செய்துள்ளது.

அதாவது அவுஸ்ரேலியாவில் குடியேறும் ஒரு நபரால் அவுஸ்ரேலியாவுக்கு நன்மை பயக்கும் என்றால் அவருக்கான குடியுரிமைக் காலத்தில் சலுகை அளிக்கலாம் என்று சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவுக்கு அவுஸ்ரேலியாவில் உள்ள எல்லாக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இதனால் இந்தச் சட்டம் அடுத்த வாரத்தில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ஜூலை மாதம் நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் போட்டித் தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் 31 வயதான பவாத் அகமது இடம் பிடிக்க வாய்ப்புள்ளது. ஆஷஸ் தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் இடம் பிடிக்க பவாத் அகமதுவுக்கு வாய்ப்பிருக்கிறது என்று அவுஸ்ரேலிய அணியின் தேர்வுக் குழுத் தலைவர் ஜோன் இன்வெரைட்டியும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# அப்ரிடி கவலை



(கராச்சி)

சூதாட்டம் கிரிக்கெட்டில் தலைதூக்கியிருப்பது கவலை அளிக்கின்றது.இதனை தடுக்கும் வகையில் சகல நாட்டு கிரிக்கெட் சபைகளும் ஐ.சி.சி.யுடன்இணைந்து ஒரு புதிய விதியை உருவாக்க வேண்டும் என பாகிஸ்தான் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இப்போதெல்லாம் உலகம் முழுவதும் நிறைய ருவென்ரி-20 கிரிக்கெட் லீக் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் கணிசமான வருமானம் வீரர்களுக்கு கிடைக்கிறது. அப்படி இருக்கையில், வீரர்கள் ஏன் இது போன்று சட்டத்திற்கு புறம்பான(சூதாட்டம்)செயல்களில் ஈடுபட்டு பணம் பெறுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சக கிரிக்கெட் வீரர்கள் சிறைக்குப் போவதைப் பார்க்க மிகவும் வருத்தமாக இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரக்பி நடுவர் சங்கம் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையில் ரக்பி போட்டி நடுவர்கள் பலரும் தொழில்களிலிருந்து ஓய்வுபெற்றுக் கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக இலங்கை ரக்பி நடுவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் அடுத்துவரும் கழக மட்ட போட்டிகளின்போது பணியாற்றுவதற்கு கூட நடுவர்கள் இல்லாமல்போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை ரக்பி நடுவர்கள் சங்கத்தின் தலைவர் ஓவில் பெர்ணான்டோ தெரிவித்தார்.கடந்த மார்ச் 5ஆம் திகதி நேவி எதிர் பொலிஸ் கழகங்களுக்கு இடையி லான போட்டியொன்றில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன், 22 வயதான ரோஹித்த ராஜபக்ஷ திமித்ரி குணசேகர என்ற நடுவரை தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆனால் சம்பவம் தொடர்பில் இலங்கை ரக்பி விளையாட்டுச் சங்கம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும் விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழுவிலிருந்த முக்கிய நடுவர்கள் அழுத்தம் காரணமாக தொழிலிலிருந்தே ஓய்வுபெற்றுச் செல்வதாகவும் ஓவில் பெர்ணான்டோ சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஒருமாத காலத்தில் மூத்த நடுவர்கள் நால்வர் ஓய்வுபெற்றுச் செல்வதாகவும் ரக்பி நிர்வாக சபை நடவடிக்கை எதுவும் உருப்படியாக எடுக்காவிட்டால் நிலைமை மோசமாகும் என்றும் ஓவில் பெர்ணான்டோ கூறினார். இதனிடையே, ரோஹித்த ராஜபக்ஷவினால் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட நடுவர் திமித்ரி குணசேகர மீது, வேறொரு போட்டியொன்று தொடர்பில் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவரும் இன்னொரு நடுவரும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ரோயல் எதிர் இசிபத்தனை கல்லூரிகளுக்கிடையில் நடந்த போட்டியொன்றின்போது போட்டியை உன்னிப்பாக அவதானிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில், அவர்களுக்கு ஒருமாத காலத்திற்கு தடை விதிக் கப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர இன்னொரு மூத்த நடுவருக்கு ஓராண்டுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மற்றொரு நடுவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளார். மொத்தமாக 4 நடுவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை மட்டப் போட்டி ஒன்று தொடர்பில் நடுவர் திமித்ரி குணசேகர மீது போட்டித் தடை விதிக்கப்பட்டமைக்கும், அவர் ஜனாதிபதியின் மகனால் ஏற்கனவே கழக மட்டப் போட்டியொன்றில் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவத்திற்கும் எந்தவித தொடர்புமில்லை என்றும் ஓவில் பெர்னாண்டோ கூறினார்.

ஜனாதிபதியின் மகனால் ரக்பி நடுவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது பற்றிய விசாரணைகளின் நிலை என்னவென்று இலங்கை ரக்பி சங்கத்தின் கருத்தை உடனடியாகப் பெறமுடியவில்லை.

# விளையாட்டுச் செய்திகள்

# கால்பந்துப் போட்டியில் அசத்திய வடமாகாணம்

(வட்டுக்கோட்டை)

வடக்கு மாகாணம் மற்றும், வெளி மாகாணப் பாடசாலைகளுக்குமிடையிலான சிநேகபூர்வ பெருவிளையாட்டுப்போட்டிகளில் வடமாகாணப் பாடசாலை அணிகள் கால்பந்தாட்டப்போட்டிகளில் ஆதிக்கம் செலுத்தி தமதுதிறமைகளைவெளிப்படுத்தியுள்ளன.

வடக்கு மாகாணம் மற்றும் ஏனைய மாகாணப் பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கிடையில் கடந்த 30,31ஆம் திகதிகளில் சிநேகபூர்வ பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்வி பணிமனையின் ஒருங்குபடுத்தலில் மேற்கொள்ளப்பட்ட இப்போட்டி நிகழ்வுகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



இதில் வடமாகாணம், குறிப்பாக, யாழ். மாவட்ட பாடசாலை அணிகள் கால்பந்தாட்டப் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்தி அசத்தியுள்ளன.

முதல் நாள் போட்டி நிகழ்வில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றிவாகை சூடியது. தொடர்ந்து இரண்டாம் நாள் நடைபெற்ற போட்டிகளில் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் வெற்றியைப் பதிவாக்கியுள்ளன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், அநுராதபுரம் சென். ஜோசப் கல்லூரி அணியும் முதல் போட்டியில் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணியும், மட்டக்களப்பு வித்தியானந்தாக் கல்லூரி அணியும் மோதின. இதில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்தா உயர்தரப் பாடசாலை அணியும், அநுராதபுரம் சுவர்ணபாலிக மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணி 14.4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், அநுராதபுரம் மகளிர் மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் மகாஜனாக் கல்லூரி அணி 0-2 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தது.

பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிஅணியும் மோதின. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், அநுராதபுரம் மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் அநுராதபுரம் மத்திய கல்லூரி அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரு நாட்களாக இடம் பெற்ற இப்பெருவிளையாட்டுப் போட்டிகளில் வடமாகாண வீரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன் ஏனைய மாவட்ட விளையாட்டு வீரர்களுடன் நல்ல நட்புறவை ஏற்படுத்தும் நோக்குடன் நடைபெற்ற இப்போட்டி உரிய பலனை அடைந்திருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மாகாண பெருவிளையாட்டு நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டு நேற்று ஆரம்பமானது.

நேற்று முதல் 28,29ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பெருவிளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறவுள்ளன.

நேற்றைய தினம் ஆண்,பெண்களுக்கான ரெபில் ரென்னிஸ் மற்றும் சதுரங்கப் போட்டிகளே நேற்று ஆரம்பமானதுடன் நாளை வரை இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதில் ரெபில் ரென்னிஸ் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலும், சதுரங்கப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்று வருகின்றன. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் 4,5ஆம் திகதிகளில் ஆண், பெண்களுக்கான கராத்தேப் போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், இதில் பங்குகொள்வோரை உரிய நேரத்திற்கு வருகை தருமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)



அச்சுவேலி தம்பாலை சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

# விரைவில் அரையிறுதி ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஜெயரட்ணசிங்க வெற்றிக் கிண்ணத்திற்கான ஒரு நாள் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.சென்ரல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் வீ.டி.ஜெயரட்ணசிங்க வெற்றிக் கிண்ணத்திற்காக 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இச்சுற்றுப்போட்டியின் காலிறுதிக்கு சென்ரல் அணி, பற்றீசியன் அணி, திருநெல்வேலி வை.எம்.எச். அணி, ஜொனியன்ஸ் அணி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, யூனியன்ஸ் அணி, ஸ்ரான்லி அணி, ஜொலிஸ்ரார் அணி ஆகியன தெரிவாகியுள்ளன.

இந்த அணிகளுக்கிடையிலான காலிறுதிப்போட்டிகள் தொடர்ந்து வரும் வாரங்களில் நடைபெறவுள்ளது.

## கிண்ணம் வெல்வதே இலக்கு

சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் கிண்ணம் வெல்வதே எமது இலக்கு. கிண்ணம் வெல்லக்கூடிய தகுதி எமக்கு இருக்கின்றது என அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் தெரிவித்தார்.

இங்கிலாந்தின் காலநிலையை உரிய முறையில் பயன்படுத்தி எமது திறமைகளை வெளிப்படுத்துவோம். எங்கள் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்து ஆடுகளத்தில் சிறப்பாக பந்து வீசுவார்கள் என்று நம்புகின்றேன். இதன் மூலம் எமக்கான வெற்றி இலகுபடுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்பள்ளி விளையாட்டு

(வடமராட்சி)

தும்பளை புனித மரியாள் முன்பள்ளியின் ஒன்பதாவது வுருடாந்தா விளையாட்டு விழா இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழா தும்பளை புனித மரியாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. மரியாள் சனசமூக நிலையத் தலைவர் ம. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ஜே. ஜோன் மவுலீஸ் அடிகளார், பருத்தித்துறை கிழக்கு கிராம உத்தியோகஸ்தர் பி. தயாநிதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இன்றைய தினம் வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் நடைபெறவ்ள்ளது.

இப்போட்டி இன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோவில் வீதி யில் அமைந்துள்ள மைதானத்தில் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



வேலணை துறையூர் ஐயனார் அணிக்கும், நெரிஞ்சிமுனை இருதயராஜா அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வாக கால்பந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது. வேலணை துறையூர் விளையாட்டுக் கழகமைதானத்தில் கடந்த 28ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற்றது. இப் போட்டியானது கழகங்களுக்கிடையேயான நட்புறவினை வளர்க்கும் நோக்குடனும் பயிற்சிப் போட்டியாகவும் நடைபெற்றது. இப் போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச நெரிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுகழகத்திற்கும் வேலணை பிரதேச துறையூர் ஐயனார் விளையாட்டுகழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதிப் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. (93)

# திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியம்!

இன்று தமிழர் அரசியலை திரும்பி பார்க்கும் ஒருவர், அனைத்து அர்ப்பணிப்புக் களும், அறிவுத் தேடல்களும் விழலுக்கு இறைத்த நீராகியி ருப்பதையே காண முடியும்.

அப்படியொரு நிலை 2009வரை இருந்தது உண்மை. அவர், இவர் என்றெல்லாம் கோசங்கள் எழும்பும் நிலைமை இப்போதில்லை. இதுதான் தமிழர் அரசியலை திரும்பிப் பார்க்க சரியான தருணம். இங்கு திரும்பிப் பார்த்தல் என்பது வெறுமனே விடுதலைப்புலிகளின் தவறு களை மட்டும் பேசுவது என்பதல்ல பொருள். தமிழர் அரசியலை கடந்த அறுபது

விமர்சனங்களை முன்வைக்க வும், அதனை எதிர்கொள்ளவும் அஞ்ச வேண்டியதில்லை. இத்தகையதொரு திரும்பிப் பார்த்தல் இன்றைய காலத்தில் மிகவும் அவசியமானது. மீண்டும் அழிவுகளுக்கு ஆராதனை செய்யும் கூட்டத்தினர் கையில் அரசியல் சிக்கிவிடுவதை தடுக்க வேண்டுமாயின், அத்தகையதொரு திரும்பிப் பார்த்தல் கட்டாயமான ஒன்றாகும். ஏனெனில்



சமீபத்தில் ஒரு ஆய்வாளர் சுட்டிக்காட்டியிருந்தது போன்று எங்கள் அனைவரது கையிலும் இரத்தக்கறை உண்டு. ஏனெனில் எங்களது இத்தனைவருட கால, அரசியல் கோசங்களுக்காக விலை கொடுத்தவர்கள் அனைவரும் சாதாரண மக்களாவர். நாங்கள் போதியளவு திறமையை காண்பித் திருக்கிறோம், போதியளவு

**- யதீந்திரா கட்டுரையிலிருந்து.**

ஆனால் இத்தனைக்கு பிறகும் தமிழர் அரசியல் ஒரு நிதானமாகவும், காலத்தை விளங்கிக் கொண்டும் நகரு கின்றதா என்பதை சிந்திக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்குமுண்டு. இன்று வரப்புக்குள் நின்றவாறு அரசி யல் பேசும் நிலை இல்லை.

வருடங்களாக பிரதிநிதித்துவம் செய்த அனைத்து தரப்பினரும் தங்களது அரசியலை திரும்பிப் பார்க்க வேண்டிய பொறுப்புக்குரியவர்களாக இருக்கின்றனர்.

மக்கள் நலனை முன்னிறுத்தி சிந்தித்தால்,

தன்னலமற்ற அர்ப்பணிப்பை நிரூபித்திருக்கிறோம். ஆனால் இறுதியில் அழிவுகளுக்கு விளக்கவுரை எழுதிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்போது திரும்பிப் பார்க்க வேண்டியதுதான் பிரதானமான தமிழர் அரசியல்ாக இருக்கிறது.

(சிறுவர் கதை)

# அது உன் கவலை! எனக்கென்ன?

அது ஒரு கிராமத்து வீடு. அந்த வீட்டுக்காரன் வாத்து, கோழி, பன்றி, ஆடு, மாடு இவற்றை வளர்த்து வந்தான். அந்த வீட்டில் எலி ஒன்று ஆனந்தமாக வாழ்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் வீட்டுக்காரன் பையில் ஏதோ வாங்கி வந்திருந்தான். எலி அந்தப் பைக்குள் என்னதான் இருக்கும் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தது.

பைக்குள்ளிருந்து அந்தப் பொருளை வெளியே எடுத்தான் வீட்டுக்காரன். அதைப் பார்த்த எலி அதிர்ச்சி அடைந்தது. அது ஒரு எலிப்பொறி. தன் மனைவி யிடம் சொன்னான், "இனி நம் வீட்டில் எலித் தொல்லை இருக்காது. இன்று இரவு ஒரு

வடையை உள்ளே வைத்து எலிப்பொறியை மூலையில் வைத்துவிடு. எலி மாட்டிக்கொண்டுவிடும்".

தனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய எலி வெளியே ஓடிவந்து அங்கிருந்த கோழியிடம் "இந்த வீட்டில் ஒரு எலிப்பொறி இருக்கிறது எச்சரிக்கை! எச்சரிக்கை" என்றது.

அதைக்கேட்ட கோழி, "ஏ, எலியே! அது உன் கவலை. எனக்கென்ன? எலிப்பொறியில் நானா மாட்டப் போகிறேன்?" என்று அலட்சியத்துடன் சொன்னது.

வருத்தமடைந்த எலி அருகில் இருந்த வாத்தைப் பார்த்து, "இந்த வீட்டில் ஒரு எலிப்பொறி இருக்கிறது எச்சரிக்கை! எச்சரிக்கை!" என்று எச்சரித்தது.

"முட்டாள் எலியே! என்னிடம் ஏன் இதைச் சொல்கிறாய்? என்னால் உனக்கு உதவ முடியாது, போ!போ!" துரத்தியது வாத்து.

வேதனையுடன் ஆட்டிடம் சென்று சொன்னது "இந்த வீட்டில் ஒரு எலிப்பொறி இருக்கிறது எச்சரிக்கை! எச்சரிக்கை"

"ஓ! எலியே! உன் நிலை பரிதாபமாகத்தான் உள்ளது. எதற்கும் நீ எச்சரிக்கையாக இரு. வடையின் வாசனைக்கு மயங்கிவிடாதே!" என்று ஏளனத்துடன் சொல்லி விட்டுக் குழையைத் தின்ன ஆரம்பித்தது.

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

09

**- டாக்டர்.பிரகாஷ் -**

**உரையாடல் ஆலோசனைகள் (Tips):**

கீழ்க்கண்ட டிப்ஸ்களைக் கடைப்படிப்பதன் மூலம் உங்கள் குழந்தையின் மொழித்திறன், (Language skills) மற்றும் கம்யூனிகேஷன் திறன்களை வளர்க்கலாம்.

விளையாட்டிற்கென தனி நேரம் ஒதுக்கி, அப்போது நன்கு உரையாடலாம்.

நேர்சரி ரைம்ஸ், மற்றும் குழந்தைப் பாடல்களைப் பாடிக்காட்டவும். மிக முக்கியமாக அவைகளை நடிப்புடன் பாடிக்காட்டவும்.

வித விதமான ஒலிகளை, வாகனங்கள், விலங்குகள் எழுப்பும் ஒலியைக் கேட்க வைக்கவும்.

நீங்கள் பேசும் போது, குழந்தையின் கவனத்தை உங்கள் பக்கம் திருப்பவும்.

குழந்தை வளர வளர, அதன் சொல்வளத்தை (vocabulary) மேம்படுத்தவும்

(உதாரணம்) உனக்கு ஜூஸ் வேணுமா? பால் வேணுமா?

ஒரு செயல் நடக்கையிலேயே அதைப் பற்றிப் பேசவும்.

(உ.ம்) கடையில இருந்து என்னென்ன வாங்கிக்கொண்டு வந்தோம் என்று பையை அவிழ்த்து ஒவ்வொன்றாகக் காட்டுதல்

குழந்தையின் பேச்சுக்கு (அது உங்களுக்குப் புரியா விட்டாலும் கூட) ஏதாவது ஒரு பதில் மொழி கூறவும். குழந்தை அந்த வாக்கியத்தை முடிக்கும் வரை அமைதிகாத்து, அதன் பின் நீங்கள் உங்கள் முறை எடுத்துப் பேச.`.பதில் அளிக்கலாம். உங்கள் தொனி (tone) முக வெளிப்பாடுகள் (facial expressions) மீது கவனமாக இருங்கள். நீங்கள் சொல்லும் வார்த்தைகளை விட அதிக சக்தி வாய்ந்தவை இவை.

மந்திரச் சொற்கள் எனப்படும் வார்த்தைகளான, சொறி, ப்ளீஸ், தாங்க் யூ, ஐ லவ் யூ போன்றவைகளை அடிக்கடி உணர்வு பூர்வமாக பயன்படுத்தவும்.

பொம்மைகள், படக் கதைகள் மூலம் உங்கள் குழந்தைகளுடன் விளையாட தினமும் கொஞ்ச நேரமாவது ஒதுக்கவும். கதைகளில் வரும் விலங்குகள், பறவை, மனிதர்களின் குரலை, உணர்ச்சி பூர்வமாக ஏற்ற இறக்கத்துடன் மிமிக்ரி செய்யவும். உங்கள் குழந்தை பேச ஆரம்பித்தவுடன், அந்தப் படத்தில் என்ன நடக்கிறது



என்று புத்தகப் படத்தைக் காட்டிக் கேட்கவும். நமது கேள்விகள் குழந்தையின் மூளையைத் தூண்டி, கற்பனா சக்தியை அதிகப் படுத்துகிறது. கதை சொல்வதன் மூலம், முன்னர் குறிப்பிட்ட 9 multiple intelligences களில் ஏறக்குறைய எல்லாவற்றையும் தூண்டி விட முடியும்.

கதைகளை சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, சின்னச் சின்னக் கேள்விகளைக் கேட்டு, அவர்களை பதில் சொல்ல ஊக்குவிக்கவும். (பிறகு அந்தக் காக்கா என்ன பண்ணிச்சு?)

குழந்தைகள் தொலைக்காட்சியைப் பார்க்கும் நேரத்தைக் குறைக்கவும். அப்படிப் பார்க்க வேண்டுமெனில், குழந்தைகளுக்கான சனலைப் போட்டு, அதில் வரும் காட்சிகளை, உங்கள் குழந்தைகளுடன் பேசியபடியே பார்க்கலாம். (இங்க பார் யானை வருது.. அது எப்படி நடக்குது பாத்தியா?)

நீங்கள் செய்யும் செயல்களையும், (அம்மா, இப்ப உனக்கு ரைம்ஸ் சொல்லப் போறேன், அப்பா, உனக்கு இப்ப வேற சட்டை போடப் போறேன்) குழந்தைகள் செய்யும் செயல்களையும் (காரை வைச்சு விளையாடுறியா?) அவர்களிடம் சொல்லி உரையாடலாம்.

கண்டிப்பாக, அவர்களுடன் eye contact வைத்துக் கொண்டு உரையாடலை நிகழ்த்தவும்.

குழந்தைகளுக்கு க்ரேயான்கள், பென்சில், பேப்பரைக் கொடுத்து, அவர்களை ஏதாவது எழுத வைக்க முயற்சிக்கவும். hand-eye coordination ஐ வளர்க்க இது உதவும்.

குழந்தைகளின் வயதுக்கு ஏற்றாற் போல உங்களது உரையாடலை.`. கட்டளைகளை, ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தைகள், ஒரு சிறிய வாக்கியம் என்று அமைத்துக் கொள்ளவும்.

குழந்தைகளிடம் நீங்கள் உரை யாடுகையில் டி.வி, டேப் ரெக்கோடர் போன்ற இடையூறுகள் ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்.

குழந்தைகளிடம் நீங்கள் செய்யும் வாக்குறுதிகளை கண்டிப்பாக நிறைவேற்றவும். ("நீ இதை சாப்பிட் டால், சொக்லேற் தருவேன்" என்றால், கண்டிப்பாக கொடுக்க வேண்டும்)


Non – verbal communication எனப்படும், உடல் மொழிகளையும் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கவும்.

(தொடரும்)

என்ன செய்வது என்று புரியாமல் நின்ற எலி பன்றியைப் பார்த்து, "பன்றியே! இந்த வீட்டில் ஒரு எலிப்பொறி இருக்கிறது எச்சரிக்கை! எச்சரிக்கை!" எனக் கூவியது.

"எலியே! எலிப்பொறியால் என்னை என்ன செய்ய இயலும்? அதனால் எனக்கு கவலையில்லை. நான் வீட்டுக்கு வெளியே இருக்கிறேன். என் உதவியை எதிர்பார்ப்பது வீண்?" என்று சொல்லிவிட்டது பன்றி.


கடைசியாக பசுவிடம் வந்த எலி, "ஓ! பசுவே! இந்த வீட்டில் ஒரு எலிப்பொறி இருக்கிறது எச்சரிக்கை! எச்சரிக்கை" என்றது.








"உன்னை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. உன்னால் அவர்களுக்கு என்ன லாபம்? எங்களைப் போல் அவர்களுக்கு நீ உதவியா செய்கிறாய்? அவர்கள் சேர்த்து வைத்ததை எல்லாம் தின்று விடுகிறாய். அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்துகிறாய். உன்னை அவர்கள் கொல்ல நினைப்பது நியாயம்தானே! உன் தலைவிதி அவ்வளவுதான்!" என்று கிண்டலடித்து சிரித்தது பசு.





யாரும் உதவி செய்ய முன்வராத நிலையில் இரவு தூங்காமல் எச்சரிக்கையுடன் விழித்திருந்தது எலி.

நடு இரவில் திடீரென்று எலிப்பொறி மூடிக் கொள்ளும் சத்தம் கேட்டது. எலி மாட்டிக்கொண்டிருக்கும் என்று நினைத்து வீட்டுக்காரனின் மனைவி எலிப்பொறியை எடுக்க சென்றாள். ஒரு நச்சுப் பாம்பின் வால் பொறி யில் மாட்டிகொண்டிருந்தது. அதை அறியாமல் பொறியைத் தொட, பாம்பு தீண்டிவிட்டது. வீட்டுக்காரனின் மனைவி அலற, அவளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றான் வீட்டுக்காரன். சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியபோதும் மனைவிக்கு காய்ச்சல் குறையவில்லை.

கோழி சூப் வைத்து சாப்பிட்டால் காய்ச்சல் நின்றுவிடும் என்று யாரோ சொல்ல, வீட்டுக்காரன் தான் வளர்த்த கோழியைக் கொன்று சூப் வைத்தான். ஆனாலும் மனைவி யின் நிலையில் முன்னேற்றம் இல்லை. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உறவினர்கள், நண்பர்கள் என்று தினந்தோறும் ஒரு பெருங்கூட்டம் அவனது மனைவியைப் பார்க்க வந்து கொண்டிருந்தது.


வந்திருப்பவர்களுக்கு உணவளிப்பதற்காக வாத்துகளைக் கொன்றான். அதுவும் போதாமல் ஆட்டையும் இறைச்சிக்காக கொன்றுவிட்டான். மனைவி யின் சிகிச்சைக்கு செலவு செய்ய பன்றியை இறைச்சிக் கடைக்கு விற்றான்.

எந்த சிகிச்சையும் பலனளிக்காமல் வீட்டுக்காரனின் மனைவி இறந்து போனாள். ஈமச் சடங்கிற்கும் அதன் பின் நிகழ்வுகளுக்கும் பணம் இல்லாதால் தான் வளர்த்த மாட்டை மாட்டிறைச்சி வியாபாரியிடம் விற்றுவிட்டான்.

இவை அனைத்தையும் வீட்டுக்குள்ளிருந்து வேதனையுடனும் கவலையுடனும் பார்த்துக்கொண்டிருந்த எலி "நான் மட்டும்தான் ஆபத்தில் இருக்கிறேன் என்று நினைத்து எனது எச்சரிக்கையை இவர்கள் அலட்சியப் படுத்தினார்களே! எனக்கு வந்த ஆபத்து இவர்களை அல்லவா பலி கொண்டு விட்டது." என்று சொல்லி அழுதது.

பிறர் ஆபத்தில் இருக்கும்போது துன்பம் அவர்களுக்குத்தானே! அதனால் நமக்கென்ன என்று சுயநலத்துடன் இருக்கிறோம். அத்துன்பம் ஏதேனும் ஒருவகையில் நம்மைத் தாக்கும்போதுதான் உண்மையை உணர்கிறோம்.


# வருகிறது சோலார் பெயின்ற்!




சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் சோலார் பனல்களை திரவ வடிவில் உருவாக்கும் காலம் வெகு தொலை வில் இல்லை. தரையி லும் சுவரி லும் சோலார் பனல் பெயின்றை அடித்தால் வீட்டுக்கு வீடு, தரைக்கு தரை, சுவருக்கு சுவர் மின்உற்பத்தி நடக்கும் என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள். உலகம் முழுவதும் சோலார் மின் உற்பத்தி திட்டங்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அனல், நீர்மின் திட்டங்களில் மின்உற்பத்தி குறையும் பகுதிகளில் சோலார் மின் உற்பத்தியில் அரசுகள் கவனம் செலுத்தி வருகின்றன. இதில் சற்று தயக்கம் காட்டுவதற்கு காரணம்.. சோலார் பனல்கள் அமைப்பதற்கு ஆகும் பெரும் செலவுதான். வருங்காலத்தில் சோலார் பனலுக்கு அதிகம் செலவிட அவசியம் இல்லை என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ஒளி ஆற்றலை மின்சாரமாக மாற்றும் திறன் பெற்ற சோலார் கலங்களின் தொகுப்புதான் சோலார் பனல் எனப்படுகிறது. பொதுவாக பொலி கிரிஸ்டலைன் சிலி கனை கொண்டுதான் இந்த பனல் உருவாக்கப்படுகிறது. மெல்லிய படச்சுருள் போல பனலை தயாரிப்பதென்றால் அமார்பஸ் சிலிகன் அல்லது கொட்மியம் டெல்யூரைட் பயன்படுத்தப்படுகிறது. இந்த இரண்டு வகையுமே அதிக செலவு ஏற்படுத்தக் கூடியவை. குறைந்த செலவிலான சோலார் பனல்களை உருவாக்கும் முயற்சி உலகம் முழுக்க நடக்கிறது. அந்த வகையில் பிளாஸ்மோனிக் தன்மை கொண்ட சேதன வகைப் பொருட்களை சோலார் பனலாக பயன்படுத்தினால் அதிக மின்உற்பத்தி செய்ய முடியும். செலவும் குறைவு என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இது திரவ வடிவில் இருப்பதால் பயன்படுத்துவதும் எளிது. திரவ வடிவில் இருக்கும் சோலார் பனலை சுவர், தரை என எந்தப் பகுதியி லும் பெயின்ற் போல எளிதில் பூச முடியும். வெளிச்சம் கிடைக்கும் எல்லா இடத்திலும் இந்த பெயின்ற் அடித்தால் மின்உற்பத்தியும் அதிகள வில் நடக்கும். இது மட்டுமின்றி காபனை அடிப்படையாக கொண்ட சிறு மூலக்கூறுகள், பொலிமர்கள் ஆகியவற்றை பயன்படுத்தி பில்ம் வகை சோலார் பனல் உருவாக்கும் முயற்சி யிலும் ஈடுபட்டுள்ளோம். இவற்றையும் குறைந்த செலவில் தயாரிக்க முடியும் என்கின்றனர் நியூயோர்க்கில் உள்ள பஃபல்லோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

# அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்...

– மணிமேகலா –




**அரிக்கன் சட்டி.** இதனை ஒரு வித தாளலயத்தோடு லாவகமாக ஆட்டி அரிசியில் இருந்து கல்லைக் களைவார்கள்.



**திரிகை.** தானியங்களை மாவாக்க தரையிலே (நிலத்திலே) துணி விரித்து நடுவில் இருக்கும் துளை யினுள் தானியத்தினைப் போட்டு கரையில் இருக்கும் தடியினைப் பற்றியபடி சுற்றச் சுற்ற தானியம் மாவாகி கீழே கொட்டுண்ணும்.




**அம்மி.** இதில் அரைச்சு அரைச்சு அம்மி தேய்ந்து போய் விடும். அப்போதெல்லாம் அம்மி பொழிவதற்கென்று ஆக்கள் வருவார்கள். அம்மியில் சின்னன் சின்னனாய் நுனி கூரான ஆயுதத்தால் சிறு சிறு பள்ளங்களை உருவாக்கி விடுவார்கள். அதன் பின் இலகுவாக அரைத்து விடலாம். அரைத்துச் சாப்பிடும் சம்பலின் சுவையை மறக்குமா நாக்கு? அதுவும் கருவேப்பிலை வச்சரைச்ச சம்பலும் புட்டும்!!



**உரல்!** "உரல் மாதிரி ஏன் நிக்கிறாய்" என்று பேசுவதில் இருந்து இதன் மகிமை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அது மாத்திரமா? அது ஒரு ஜிம் மாதிரி! இயற்கையான எக்சசைஸ். குறிப்பாக அந்நாளையப் பெண்களுக்கு. அரிசியை நனையப் போட்டு இடிப்பது, மிளகாய் வறுத்து இடிப்பது என்று அதன் பயன்பாடு பல விதத்தில். பொக்குணி உரல் என்று இன்னொன்று இருக்கிறது. மரத்தால் செய்யப்பட்ட இது இடிச்சு இடிச்சு பள்ளம் விழுந்து போய் இருக்கும். தோசைக்கு இடிச்ச சம்பல் இதில செய்தால் வலுசோக்கா இருக்கும்!



**சட்டியும் அகப்பையும்!** களிமண்ணில் செய்து சுட்டெடுத்த சட்டி! தேங்காய் துருவிய சிரட்டையில் செதுக்கித் துளையிட்டு தடியினைச் சீவி உள் நுழைத்து செம்மையுறச் செய்யப் பட்ட அகப்பை!! நெருப்படுப்பில் சமையல்!! - அது ஒரு காலம்! இயற்கையோடு இசைவுற வாழ்ந்த கடந்த நூற்றாண்டு!



**ஆட்டுக் கல்!** வேறையென்ன தோசைக்கு அரைக்கத் தான். தோசைக்கு இட்லிக்கு மாவாட்ட! கருங்கல்லு மேட். இப்ப கிறைண்டர் வந்து விட்டதால் இதுவும் இனி மியூசியம் குவாலிட்டி!!

# அணிந்த பின்னரும் ஆடைகளை அயன் செய்ய USB சாதனம்!




கணனியின் வருகையைத் தொடர்ந்து அறிமுகமான USB தொழில்நுட்பம் தற்போது மிக வேகமாக பிரபலமடைந்து வருகின்றது. இதன் காரணமாக பல துணைச் சாதனங்களும் USB இணைப்பானை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவண்ணம் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக தற்போது USB இணைப்பானில் இணைத்து ஆடைகளை அயன் செய்யக்கூடிய அதி நவீன சாதனம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. செல்லும் இடங்களுக்கு எல்லாம் இலகுவாக கூடவே எடுத்துச்செல்லக் கூடிய அளவில் மிகவும் கையடக்கம் உள்ளதாகக் காணப்படும் இச்சாதனத்திற்கு, USB இணைப்பான் மூலம் இரண்டு AA அளவு மின்கலங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தி வழங்கப்படுகின்றது. இதன் அறிமுக விலையானது 10 டொலர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிநவீன ஸ்மார்ட் செல்பேசி



சீனாவை தளமாகக் கொண்டு இயங்கும் Huawei நிறுவனமானது Ascend W1 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்துள்ளது. இது மைக்ரோசொப்ட்டின் Windows Phone 8 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் 4 அங்குல அளவு மற்றும் 480 x 800 Pixel Resolution கொண்ட IPS LCD தொடுதிரையினை உடையது.

மேலும் 1.2புர்ண வேகத்தில் செயலாற்றக்கூடிய Dual Core Qualcomm Snapdragon S4 Processor, 5 மெகாபிக்சல்கள் உடைய கமரா, Adreno 305 GPU ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ள இக்கைப்பேசியின் பெறுமதி 229.99 அமெரிக்க டொலர்கள்.

# சுயமாகவே பேஸ்புக்கில் கொமென்ற் எழுதும் வைரஸ் உருவாக்கம்




சமூக வலைத்தளமான பேஸ்புக்கில், தானாகவே லைக் போட்டு, கொமென்ற் எழுதும் வைரஸ் ஒன்றினை, வைரஸ் எதிர்ப்பு புரோகிராம் எழுதும் நிறுவனத்தினர் கண்டறிந்துள்ளனர். நல்ல வேளையாக, இது பிரேசில் நாட்டு பேஸ்புக் அக்கவுண்ட்களில் மட்டுமே, தற்போதைக்கு, இயங்குகிறது. ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளிலும் பரவும் வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு 'Trojan:JS/Febipos' எனப் பெயரிடப்பட்டுள்ளது. குரோம் பிரவுசர் மற்றும் பயர்பொக்ஸ் ஆட் ஒன் புரோகிராம் என்ற போர்வையில் இது கணனியின் உள்ளே நுழைகிறது.

கணனி பயன்படுத்துபவர், பேஸ்புக்கில் லொக் இன் செய்திடும் பட்சத்தில், இந்த வைரஸ் தான் அனுப்பப்பட்டுள்ள தளத்திலிருந்து, கணனியை செட் அப் செய்திடும் பைல் ஒன்றை இறக்கிக் கொள்கிறது. இதில் பல கட்டளைகள் அமைக்கப்பட்டுள்ளன. மற்றொரு பக்கத்திற்கான லிங்க் அமைத்தல், பதியப்பட்ட கருத்துக்களை ஷேர் செய்தல், நண்பர்கள் பக்கத்தில் கருத்துக்களை எழுதுதல், ஏற்கனவே எழுதப்பட்டுள்ளவற்றிற்கு கொமென்ற் அமைத்தல், நண்பர்களை குழுவில் சேருமாறு அழைப்பு அனுப்புதல் எனப் பல்வேறு செயல்பாடுகளுக்கான கட்டளைகள் இதில் உள்ளன.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த ட்ரோஜன் வைரஸ், தன்னை அனுப்பியவர்களை அடிக்கடி தொடர்பு கொண்டு, தன்னை அப்டேட் செய்து கொண்டு செயற்படுகிறது.

இதிலிருந்து தப்பிக்க, தேவையற்ற, நம்பிக்கை கொள்ள முடியாத ஆட் ஒன் புரோகிராம்களை, டவுண்லோட் செய்ய வேண்டாம் என மைக்ரோசொப்ட் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், பேஸ்புக் தளத்தினைப் பார்த்துப் பயன்படுத்திய பின்னர், அதிலிருந்து கட்டாயமாக லொக் அவுட் செய்திட வேண்டும் எனவும் மைக்ரோசொப்ட் அறிவுறுத்தியுள்ளது.

SkyDrive

மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கிளவுட் ஸ்டோரேஜ் எனப்படும் ஒன்லைன் சேமிப்பு வசதியானது மில்லியன் கணக்கான பயனர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் தற்போது 7GB வரையிலான இடவசதி தரப்படுகின்ற போதிலும் எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் .edu என்று முடிவடையும் மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி அதன் மூலம் Sky Drive வசதியை பயன்படுத்த முனையும் மாணவர்களுக்கு

# மாணவர்களுக்கு மேலதிக சேமிப்பு வசதி!

மேலதிகமாக 3GB வசதி தரப்படவுள்ளது.

அதாவது மொத்தமாக 10GB சேமிப்பு வசதியை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் இந்த மேலதிக சேமிப்பு வசதியானது ஒரு வருட காலத்திற்கே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயர் கல்விக்கான மின் நூல்களை இலவசமாக தரும் தளம்!




கல்லூரிகளில் பல மாணவர்கள் அடுத்த ஆண்டுக்கு தங்களைத் தயார் செய்து கொள்ளும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு நூல்களை வழங்க, கல்லூரி மற்றும் தனியார் நூலகங்கள் இருந்தாலும், தங்களுக்கென எடுத்து வைத்து, விரும்பும் நேரத்தில் படிப்பதனையே இவர்கள் விரும்புவார்கள். இவர்களுக்கு உதவிடும் வகையில் பல இணையத் தளங்கள் உள்ளன. அவற்றில் சிறப்பான ஒன்றை அண்மையில் காண நேர்ந்தது. அதன் இணைய தள முகவரி bookboon.com.

இந்தத் தளத்தில், நமக்குத் தேவைப்படும் நூலின் பெயர் அல்லது எழுதிய ஆசிரியர் அல்லது பொருள் குறித்து தேடல் கட்டத்தில் டைப் செய்தால், நாம் தேடும் பொருள் குறித்த அனைத்து நூல்களும் வரிசையாகப் பட்டியலிடப்படும். தேவையான நூல் தலைப்பு அருகே, டபுள் கிளிக் செய்தால், உடன் நாம் எந்த நாட்டில் இருந்து இந்த நூலினைத் தரவிறக்கம் செய்ய இருக்கிறோம் என்ற தகவலைத் தர வேண்டும். உடனே அந்நூல் பி.டி. எப். வடிவில், கணனியில் தரவிறக்கம் செய்யப்படும். நம் பெயரைப் பதிவு செய்வதோ, அக்கவுண்ட் உருவாக்குவதோ இதில் தேவை இல்லை. கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என உயர்கல்வி பயில்வோருக்கு இந்தத் தளம் மிகவும் உதவி செய்வதாய் அமைந்துள்ளது. கற்க விரும்பும் அனைவரும் சென்று பார்க்க வேண்டிய தளம் இது.



கணினி உலா

# ஸ்கைப் சேவை - பாரிய அதிர்ச்சி!




வெளிநாட்டில் இருக்கும் ஒருவருடன் நாம் எளிதில் பேச இன்று பலரும் பயன்படுத்துவது ஸ்கைப் நெட்வோர்க்கை தான். இதில் இருக்கும் ஆபத்துகள் உண்மையில் பலருக்கு தெரிவதில்லை ஸ்கைப்பில் நீங்கள் உரையாடுவது பதிவு செய்யபடுகின்றது அது தெரியுமா உங்களுக்கு. மேலும் ஸ்கைப்பில் இருக்கும் வைரஸ் தான் இணையத்திலேயே மிக கொடுமையான வைரஸ். ஸ்கைப் பயன்படுத்துவோர் பெற்று வரும், கெடுதல் விளைவிக்கும் ஸ்பாம் மெயில் குறித்து எச்சரிக்கை கொடுத்து வந்தது. தற்போது இந்த ஸ்பாம் வேகமாகப் பரவி வருவதாக அறிவித்துள்ளது. இந்த வைரஸ் உங்கள் கணிப்பொறியை என்னென்ன செய்யும் என்பதை கீழே பாருங்கள் சற்று அதிர்ந்தே போய்விடுவீர்கள்....

ஸ்கைப் பயன்படுத்துவோரின் தொடர்பு முகவரி எளிதாக அவர்களைச் சென்றடையும். இதில் ஏதேனும் ஒரு லிங்க் தரப்பட்டிருக்கும். இதில் கிளிக் செய்தால், கெடுதல் விளைவிக்கும் வைரஸ் புரோகிராம், கணினியில் வந்து விடும். பின்னர் இந்த புரோகிராம், கணனியில் தரப்படும் பெர் சனல் தகவல்களை, இணையம் மற்றும் வங்கி அக்கவுண்ட்களுக்கான யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட்களை, தொலைவில் உள்ள இன்னொரு சேர் வருக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறது. அதனை இயக்குபவர், அங்கி ருந்தே, உங்கள் கணனியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் இந்த வைரஸ் புரோகிராம் செயற்படும். இதனைத் தவிர்க்க, ஸ்கைப் கொண்டாக்ட் முகவரியில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து வரும் இன்ஸ்டண்ட் மெசேஜில் உள்ள லிங்க்கில் கிளிக் செய்திடக் கூடாது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிச்சவீடு அமைக்கப்படுமா?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தின் பேய்பாறைபிட்டி கரையோரக் கிராமத்தில் கடற்றொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் வெளிச்ச வீடு இன்மையால் தரம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர். இப்பிரதேச மக்கள் மீள்குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலே வெளிச்ச வீடு பொருத்தப்படாமல் இருப்பதால் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது தாம் சிரமப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கரையோரப் பிரதேசத்தை அதிகம் உள்ளடக்கிய முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிச்சவீடு அமைக்கப்படவேண்டியது அவசியமானதாகும் அத்துடன் இம்மாவட்டத்தில் முல்லைத்தீவு நகர்ப் பகுதியிலும் கொக்கிளாய் மற்றும் குறித்த கிராமமான பேய்பாறைபிட்டி ஆகிய 3 பிரதேசங்களில் வெளிச்சவீடு அத்தியாவசிய தேவையாகவுள்ளதாகவும், மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே ஆழ்கடல் மீன் பிடி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு வெளிச்ச வீட்டை அமைக்க உரியவர்கள் கவனம் செலுத்துவார்களா என மீனவ சமூகத்தினர் கேள்வி எழுப்புகின்றனர். (04)

## ஏழாலை சிவகுரு வீதிப் பகுதியில் மின்சாரக்கம்பிகளை உரசும் மரங்கள்

(சுன்னாகம்)

ஏழாலை மத்தி சிவகுருவீதியில் கம்பியினால் இணைக்கப்பட்ட மின்சாரக் கம்பிகள் ஒன்றோடு ஒன்று உரசி அறுந்து விழுந்துள்ளது.

இவ் மின்சாரக் கம்பிகளின் மேல் இப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களின் மரங்கள் தென்னோலைகள் என்பன வளர்ந்து கம்பிகளை அமர்த்தியே அவை உரசுண்டு அறுத்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அனர்த்தம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதுடன்இச்சமயத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்த மீன் வியாபாரியும், பொதுமகன் ஒருவரும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளதாக தெரிவிக்கும் இப்பிரதேச மக்கள் கடந்த மாதமும் இப்படியான அனர்த்தம் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே மின்சாரக் கம்பிகள் செல்லும் வழியிலுள்ள மரக் கொப்புகள், தென்னோலைகளை அகற்றி மின்சாரஇணைப்பு வயர்களை பாதுகாக்க வீட்டு உரிமையாளர்கள் மின்சார சபையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (66)

## தேர்தல் இடாப்பு பதிவு

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு ஜே/135 கிராமசேவையாளர் பிரிவில் தேர்தல் இடாப்புக்கள் பதிவு செய்யும் வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

இப்பிரிவு கிராம சேவையாளர் க. நித்தியானந்தனும் பட்டதாரிப்பயிலுநர்களும் வீடு வீடாகச சென்று விண்ணப்பங்களை பதிவு செய்து குடும்பத் தலைவரிடமோ குடும்பத் தலைவியிடமோ கையொப்பம் வாங்கிக் கொள்கின்றனர். (104)

# கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு வவுனியாவில் மணிவிழா

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் மகாவித்துவான் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு வடமாகாண ஆளுநர் செயலகத்தின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். விசேட விருந்தினராக வவுனியா வளாக யாழ். பல்கலைக்கழக முதல்வர் க. அருள்வேல் சிறப்பு விருந்தினராக வவுனியா பிரதேசசெயலாளர் அ.சிவபாலசுந்தரன் கௌரவவிருந்தினர்களாக வவுனியா இந்து மாமன்ற செயலாளர் சிவநெறிப் புலவர் சி. ஏ. இராஜேஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மணிவிழா நிகழ்வில் மங்கள விளக்கேற்றல், தேவார மங்கலம், தமிழ்மொழிவாழ்த்து, இசை மங்கல வரவேற்பு நடனம், வரவேற்புரை, ஆசியுரை தலைமையுரை இடம்பெற்று விழா நாயகரால் எழுதப்பட்ட நூல்களின் அறிமுக உரைகள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மணிவிழா நாயகர் பற்றிய உரைகளை மணிவிழா அமைப்பாளர், காரையம்பதி பிரசங்க சைவமணி எஸ். சண்முகரெத்தினம், வவுனியா தமிழ்க்கலவன் மகாவித்தியாலய ஆசிரியர் இலக்கிய சுடர் ஐ. கதிர்காம சேகரன் மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் திருமதி ஹேமாசண்முகசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து மணிவிழா நாயகரைக் கௌரவித்தல் நிகழ்வு, பதிலுரை இடம் பெறவுள்ளது. குறிப்பாக மணிவிழாவின் போது, சைவமே, தமிழ் கலை இலக்கியம், கல்வி, மருத்துவம், வர்த்தகம், சமூக மேம்பாடு ஆகியவற்றுக்காக அர்ப்பணிப்போடு உழைத்துவரும் பெரியோர்களையும், பல்துறைசார்ந்த ஆற்றலாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

நிறைவாக மணிவிழாக்குழு செயலாளர் ஐ.யோகநாதனின் நன்றியுரை இடம்பெறும் நிகழ்ச்சி அறிவிப்பாளராக வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க துணைச் செயலாளர் சி. நாகராஜா கடமையாற்றுவார். (60)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நாகவிகாரையில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று களவு போயிருப்பதாக யாழ். பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட்ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுமார் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நீர் இறைக்கும் இயந்திரம் கடந்த புதன் கிழமை அன்று களவு போயிருப்பதாகத் தெரியவருகின்றது. இந்த முறைப்பாட்டை அடுத்து யாழ். நகரின் சில பகுதிகளில் தேடுதல் நடாத்திய பொலிஸார் ஓர் இடத்தில் 23 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்களின் பகுதிகளைக் கைப்பற்றியுள்ளதுடன் இந்தச் சம்பவம் சம்பந்தமாக மூன்று பேரையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்திவருவதாகவும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.(பா)



இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளையினரால் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் பற்றியபரப்புரை ஒன்று வடமராட்சி பிரிவுக்கு நடாத்தப்பட்டது. இலங்கை செஞ்சிலுவைச் சங்க பரப்புரையை பிரிவுத் தலைவர் திரு. C.A.ஸ்ரனிஸ்லோஸ் கிளைத் தலைவர் கு.பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். வத்திராயன் வடக்கு கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும், மீள் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும், கலந்து கொண்டனர். (பா - 02)



# 2013 - 2014 குரு பெயர்ச்சி பலன்கள்

## ரிஷபம்:



கார்த்திகை 2,3,4-ஆம் பாதம்,
ரோஷிணி, மிருகசீரிடம் 1,2-ஆம் பாதம்

உதாரண புருஷராக வாழ்ந்து காட்டுபவர் நீங்கள். குரு பகவான் 28.5.13 முதல் 12.6.14 வரையிலும் உங்கள் ராசியை விட்டு விலகி, தன வீடான 2இல் அமர்வதால், எதிர்பார்த்த பணம் வந்து சேரும். குடும்ப ஸ்தானத்தில் குரு அமர்வதால் வீட்டில் அமைதி தவழும். சுப நிகழ்வுகளால் வீடு களைகட்டும். பிரிந்த தம்பதி ஒன்றுசேர்வர். வீண் பதற்றம், பயம் நீங்கும். பெரிய நோய் இருப்பது போன்ற பிரமை நீங்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். காணாமற் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். எதிர்மறை எண்ணங்கள், கூடா நட்பு விலகும். பேச்சில் கனிவு பிறக்கும்.

குரு 6-ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதிர்ப்புகள் அடங்கும். நல்லவர்களது நட்பும், ஆலோசனைகளும் புதிய பாதையில் உங்களைப் பயணிக்க வைக்கும். அதிக வட்டிக் கடனில் ஒருபகுதியை தீர்ப்பீர்கள். சோர்வு நீங்கும். குரு 8ஆவது வீட்டைப் பார்ப்பதால் மூச்சுத் திணறல், சளித் தொந்தரவு நீங்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். 10ஆவது வீட்டையும் பார்ப்பதால், புது வேலை கிடைக்கும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பதவி வாய்க்கும். வழக்கு சாதகமாகும்.

**குருபகவானின் சஞ்சாரம்:** 28.5.13 முதல் 25.6.13 வரையிலும் உங்களின் சப்தம - விரயாதிபதியான செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் குரு செல்கிறார். உங்களின் பலவீனத்தை சரிசெய்வீர்கள். தம்பதிக்கு இடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மாமனார் - மாமியார் உதவுவர். பூர்வீகச் சொத்து சம்பந்தமான வில்லங்கம், பேச்சு வார்த்தையால் சுமுகமாகும். மனைவிவழி உறவினர்களால் நன்மை உண்டு. தடைப்பட்ட திருமணம் கூடிவரும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

26.6.13 முதல் 28.8.13 வரை; 27.1.14 முதல் 12.4.14 வரை ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு செல்கிறார். மறைமுக எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். வங்கி, பங்குச்சந்தை மூலம் பணம் வரும். காரியங்கள் கைகூடும். சொத்து சேரும்.

29.8.13 முதல் 12.11.13 வரை உங்களின் அஷ்டம - லாபாதிபதியான குரு, தமது நட்சத்திரமான புனர்பூசத்தில் செல்வதால் வேலை அதிகரிக்கும். வீண் செலவுகளைத் தவிர்க்கவும். புது பொறுப்புகள் - பதவிகளை ஏற்க வேண்டாம். சிலர், உங்கள் மீது வீண்பழி சுமத்தலாம்.

குரு 13.11.13 முதல் 26.1.14 வரை புனர்பூச நட்சத்திரத்திலும், 27.1.14 முதல் 11.3.14 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்கிறார். வீண் செலவு, கவலைகள் வந்து போகும்.

வியாபாரத்தில், கடந்த கால நஷ்டங்களை சரி செய்வீர்கள். பற்று - வரவு உயரும். பாக்கிகள் வசூலாகும். அனுபவம், பொறுப்பு மிகுந்த ஆட்களை பணியில் அமர்த்துவீர்கள். பெரிய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பங்குதாரர்களுடன் மோதல்கள் விலகும். வீடு, வாகன விற்பனை, கணனி உதிரிப்பாகங்கள், இரசாயனப்பொருட்கள் வகைகளால் ஆதாயம் அடைவீர்கள்.

உத்தியோகத்தில், அவமானங்களும் ஏமாற்றங்களும் விலகும். உங்களின் உழைப்பை அதிகாரிகள் புரிந்து கொள்வர். சக ஊழியர்கள் மத்தியில் இருந்த அதிருப்தி விலகும். பதவி உயர்வுக்காக உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். சிலருக்கு அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்திலிருந்து புது வாய்ப்பு வரும்.

கன்னிப்பெண்களுக்கு தடைப்பட்ட திருமணம் கூடிவரும். சிலருக்கு வேலை மாற்றம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். மாணவர்கள், உயர்கல்வியில் அதிக மதிப்பெண்ணுடன் வெற்றி பெற்று எதிர்பார்த்த கல்விப் பிரிவில் சேர்வார்கள். கலைத் துறையினரின் புதிய முயற்சிகள் மூத்த கலைஞர்களின் ஆதரவால் வெற்றியடையும். அரசியல்வாதிகளுக்குப் பெரிய பொறுப்புகள் தேடி வரும் தேர்தலில் வெற்றி கிட்டும்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி, உங்கள் வாழ்வின் அதிர்ஷ்ட அத்தியாயத்தைத் துவக்கிவைப்பதாக அமையும்.

**பரிகாரம்:** தந்தையால் கைவிடப்பட்டவர்களுக்கு உதவுங்கள். மேன்மேலும் வெற்றி பெறுவீர்கள். (தொடரும்)

# 1000 பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டம்;

# அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் அக்கராயன் மகாவித்தியாலயத்திலிருந்து தேசியபாடசாலை ரீதியாக அக்கராயன் ஆரம்பவித்தியாலயம் பிரிந்து இயங்க ஆரம்பித்துள்ளது.

அதற்கமைவாக புதிதாக அமைக்கப்பட்ட அக்கராயன் ஆரம்பவித்தியாலயம் நேற்று ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகளால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் அக்கராயன் மகாவித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டபோதும் கல்விக் கொள்கைக்கமைவாக அதன் ஆரம்பப்பிரிவு தனியான பாடசாலையாக இயங்கவில்லை இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேற்கொண்ட துரித நடவடிக்கையையடுத்து குறித்த ஆரம்பப்பாடசாலைக்கு புதிதாக அதிபர் நியமிக்கப்பட்டு பாடசாலையை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டிருந்தன. அதனடிப்படையில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேல் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி மேம்பாட்டை கிராமப் புறங்களிலிருந்து உயர்நிலைக்கு கொண்டு வருவதென்ற கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் அவரின் உயரிய சிந்தனையின் அடிப்படையில் இன்று அக்கராயன் பிரதேசமும் மேம்பாடுகண்டு வருகின்றது. அவரின் கொள்கையின் ஒரு அங்கமாகவே இப் பாடசாலையின் உருவாக்கமும் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்ட அவர் நாட்டிலே நடைபெறுகின்ற நற்காரியங்களை ஊக்குவிக்கின்ற நல்லெண்ணங்களைக் கொண்டவர்களாக பத்திரிகையாளர்கள் செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்குஉரையாற்றிய கரைச்சிப்பிரதேசசபை உறுப்பினரும் அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியருமான சபாநாயகம் ஒருபாடசாலையின் உருவாக்கம் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடச்செய்யும் என்ற கூற்றுக்கமைவாக அக்கராயனிலே ஒருசிறைச்சாலையை மூடி ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையிலிருந்து இன்று மற்றுமொரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றை நாம் காண்கின்றோம் இது இப்பகுதியில் மேம்பட்டுவரும் கல்வித்தளத்தின் வீச்சை எடுத்தியம்புகின்றது. அத்தோடு இப்பாடசாலையின் உருவாக்கத்தினூடாக அக்கராயன் மற்றுமொரு கல்விச்சகாப்தத்திற்குள் உள்நுழைகின்றது. இதுதொடர்ந்தும் இப்பகுதியில் ஒரு ஆரோக்கியமான கல்விச்சமூகத்தை உருவாக்குவதற்கான உந்து சக்தியாக அமையும் என நாம் கருதுகின்றோம்.

எனவே, இப்பாடசாலையின் தோற்றம இப்பகுதிமக்களின் கல்வித்தளத்திற்கு கிடைத்த அரியவாய்ப்பென்றே கருதமுடியும் அந்தவகையில் அக்கராயன் மக்களும் கல்விச் சமூகத்தினரும் இக்கல்விச்சாலையின் உருவாக்கம் குறித்து பெருமகிழ்வடைகின்றோம். இதேவேளை இப்பாடசாலையின் உருவாக்கத்திற்கு பலர் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளதுடன் பலர் உறுதுணையாகவும் செயற்பட்டுள்ளனர் இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களின் கல்வி மேம்பாட்டை இலக்காகக் கொண்டு செயற்படும் நல்லெண்ணம் கொண்ட சிந்தனையாளர்களின் கொள்கைக்கமைவாக இப்பாடசாலை இப்பகுதியில் கணித, விஞ்ஞான மாணவர்களை உருவாக்குவதற்கான கொள்கையில் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் செயற்படவேண்டும் என பிரதேசசபை உறுப்பினர் சபாநாயகம் மேலும் குறிப்பிட்டார்.

சேவாலங்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டத்தில் குறித்த பாடசாலை இயங்க ஆரம்பித்துள்ளது. தரம் ஒன்றுதொடக்கம் ஐந்துவரையான வகுப்புக்களை உள்ளடக்கிய இவ் ஆரம்பப்பாடசாலை யில் சுமார் 174 மாணவர்களுடன் இயங்க ஆரம்பித்துள்ளது.

பாடசாலை அதிபர் கணேசலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சிக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அமிர்தலிங்கம் புதுமுறிப்பபு விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் கண்ணபிரான் அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் மதுரநாயகம், மத போதகர்களான கமலநாதன் மற்றும் துசாந்தன், ஆகியோரும் அயற்பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினரும் பெற்றோர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.



சுன்னாகம் வாழ்வகத்திற்கு பருத்தித்துறை ஆர்.ரி.குலசிங்கம் பிறயில் எழுத்துக்களால் அச்சிடப்பட்ட நூல் தொகுதியை வாழ்வகத்தலைவர் எஸ்.ரவீந்திரனிடம் கையளிப்பதையும், சட்டத்தரணி எஸ்.அற்புதராஜா அருகில் நிற்பதையும் படத்தில்காணலாம் இவர் ஏற்கனவே வாழ்வகத்திற்கு 7 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பிறயில் எழுத்துக்களால் அச்சிடப்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (01)

# சாவகச்சேரி ஸ்கந்தவரோதயாவுக்கு பிரமாண்டமான உள்ளக அரங்கு

சாவகச்சேரி யா/சந்திபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்திற்கு பெருமளவு நீதி செலவில் பிரமாண்டமான உள்ளக அரங்கொன்றின் நிர்மாணிப்புப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகிறது. தென்மராட்சி பாடசாலைகளுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உள்ளக அரங்கு T.S.E.P. திட்டத்தின் கீழ் "உலக வங்கி" நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ் உள்ளக அரங்கானது வருங்காலங்களில் பாடசாலைத் தேவைகள் மற்றும் நிகழ்வுகளுக்கு மட்டுமன்றி மட்டுவில் பிரதேச மக்களின் பொது நிகழ்வுகளுக்கும் குறிப்பாக கிராம சேவகர் கூட்டம், சம்மேளனக் கூட்டம் போன்ற பொது நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் என பெரும்பாலானவர்களின் ஒத்துழைப்பில் இந்த அரங்கு பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இதேவேளை மகிந்த சிந்தனையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வு கூடம் இன்னும் ஒரு சில வாரங்களில் திறக்கப்படவிருக்கிறது. இந்த ஆய்வு கூடத்தின் மூலம் இப்பிரதேச வித்தியாலய மாணவர்கள் இந்த வருடம் தொடக்கம் க.பொ.த.(உ/த) கணித, விஞ்ஞான பிரிவுகளில் இணைந்து கற்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் புதிய ஆய்வுகூடத்தின் மூலம் கணனிக் கற்கை வசதிகள், ஆங்கில மொழிக்கற்கை வசதிகள் என பலதரப்பட்ட ஆய்வுநேரக் கற்கைக்கான வழிமுறைகளையும் பெறுவர். மேலும் இவ் விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வு கூடம் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் உள்ளக அரங்கு இவை அனைத்தும் இப்பாடசாலைக்கும், அப்பகுதிக்கும் பெரும் பயன்பாடாக இருக்குமென நம்பப்படுகிறது. தொடர்ந்து இது போல பல கட்டடங்களை தன்னகத்தே கொண்டு மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என அதிபர், ஆசிரியர்க்ள் பாடசாலை நலன்விரும்பிகள் என அனைவரும் விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்புதிய உள்ளக அரங்கானது 120 அடி நீளமும், 25 அடி அகலமும் கொண்டதாக மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (43)

# சிட்டிவேரம் அம்மன் ஆலய உற்சவம் பெருமளவான பக்தர்கள் வருகை

(வரணி)

வரணி அருள்மிகு சிட்வேரம் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம்.கடந்த திங்கட்கிழமை மிகவும் சிறப்பான முறையில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை ஏராளமான அடியார்கள் ஆலயத்தில் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். சுமார் ஐம்பதிற்க்கும் மேற்பட்ட அடியார்கள் (பகல்) மரநிழலில் பொங்கல் பொங்கி பூஜை செய்ய. தனர். அம்பாளுக்கு 13ஆம் திரு விழா (உற்சவம்) தேர் உலாவும் 14ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

ஆலய உற்சவத்தை முன்னிட்டு வாகனப் போக்குவரத்துக்கு முன் வீதி முற்றாக தடை செய்யப்பட்டு பின் வீதியால் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சுகாதார (வரணிப்பிரிவு) உத்தியோகத்தரும் சுகாதார நிலையை அவதானித்து வருகின்றனார்.

வியாபர நிலைய உரிமையாளர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தற்காலிக கொட்டகைகளை அமைத்துள்ளனர். இவ்வாலயத்தில் தேர் மற்றும் தீர்த்த உற்சவகாலத்தில் இதுவரை காலமும் பல ஆயிரக் கணக்கான அடியார்கள் வருகை தருவது வழக்கம். தற்போது சமாதான காலம் நிலவுவதால் இந்த ஆண்டு அடியார்கள் தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக குறிப்பிடத்தக்கது. (150)

# மின்விளக்குகள் இல்லாத தம்பாலை விமானநிலையவீதி

(அச்சுவேலி)

தம்பாலை விமானநிலைய வீதிப் பகுதிகளில் மின்விளக்குகள் எவையும் பொருத்தப்படாத நிலையில் அவ் வீதி இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.


இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வீதியின் அருகில் காணப்படும் வீடுகளில் உள்ள மக்கள் அச்சத்துடனே தமது இரவுப் பொழுதைக் கழிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் வீதி மின் விளக்குகளைப் பொருத்தி பயணிகளின் போக்குவரத்திற்கு வழி செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (85)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கனிஷ்ட வட்ட முகாம் அண்மையில் மருதங்கேணி அம்பன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பிரிவுச் செயலாளர் எஸ்.திரவியராசா, முதலுதவிப் பயிற்சியாளர் ந.இலங்கேஸ்வரன் உள்ளிட்ட வளவாளர்கள் கலந்து கொண்டனர். (பா, 01)



# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## கணிதம்

பிரபல ஆசிரியர் :- தபேசன் B.sc Eng(Hon.civil)


01) பின்வருவனவற்றுள் நேரத்தின் பரிமாணத்தை கொண்டிராத கணியம்,

1) வேகம் 2) பரப்பிழுவை
3) அமுக்கம் 4) வேலை
5) சடத்துவத் திருப்பம்

02) பிரதான அளவிடையின் 1 mm பிரிவுகள் 49 ஆனது 50 வேணியர் பிரிவுகளாக வகுக்கப்பட்ட வேணியர் அளவிடை கருவியொன்றில் அளக்கப்பட்ட நீளம் 6.048 cm ஆயின் அளவிடைக்கேற்ப பொருந்தும் வேணியர் பிரிவுகளின் எண்ணிக்கை

1) 48 2) 25 3) 24
4) 2 5) 1

03) தரப்பட்டுள்ள வரிப்படம், கிடையான மேசையொன்றின் மேல் வைக்கப்பட்டு, விடுவிக்கப்படும் போது எப்போதும் நிமிர்த்தம் நிலைக்குத்து நிலைக்கு மீளும், பொம்மை யொன்றின் குறுக்குவெட்டொன்றை காட்டு கின்றது. இப்பொம்மையின் ஈர்வை மையம், பெரும்பாலும் காணப்படக்கூடிய இடம்,




1) A 2) B
3) C 4) D
5) E

04) V என்னும் மாறாக்கதியுடன் கிடையான தளம் ஒன்றில் உருளும் m திணிவுடைய திண்மக்கோளம் ஒன்றின் மொத்த இயக்க சக்திக்கு சமனாக இருப்பது, (திங்மக்கோளத்தின் சடத்துவத் திருப்பம் 2/5 mr², இங்கு r கோளத்தின் ஆரையாகும்)


1) $\frac{1}{2}mv^2$ 2) $\frac{1}{5}mv^2$ 3) $\frac{2}{5}mv^2$ 4) $\frac{7}{5}mv^2$ 5) $\frac{7}{10}mv^2$

05) ஓர் இரச வெப்பமானியின் குமிழில் இருந்து $100^0C$ வரையான வெப்ப நிலைக்கு இடைப்பட்ட இரசநிரலின் நீளம் 20 mm உம், குமிழில் இருந்து $20^0C$ வெப்பநிலை வரையான நீளம் 80 mm உம் ஆகும். $0^0C$ இல் இரச நிரலில் நீளம்

1) 33 mm 2) 40 mm 3) 50 mm
4) 100 mm 5) 104 mm

06) ஓர் வட்டத்தட்டின் மையத்தில் படத்தில் காட்டியவாறு துளை ஒன்று உள்ளது. வெப்பநிலை அதிகரிக்கும்போது துளையின் விட்டம்,

1) குறைவடையும்
2) அதிகரிக்கும்
3) மாற்றமில்லை
4) ஆரம்பத்தில் குறைவடைந்து பின்னர் அதிகரிக்கும்
5) பருமன் மாற்றமில்லை ஆனால் வடிவம் மாறும்.



07) பொருள் ஒன்றும், திரை ஒன்றும் ஒரு குறிப்பிட்ட இடைத்தூரத்தில் வைக்கப்பட்டு அவற்றுக்கிடையில் குவிவுவில்லை ஒன்று வைக்கப்படும்போது 2.5 உருப்பெருக்கமுள்ள விம்பம் திரையில் பெறப்பட்டது. வில்லையானது திரையை நோக்கி 30 cm நகர்த்தப்பட்டபோது மீண்டும் தெளிவான விம்பம் திரையில் பெறப்பட்டது. ஆயின் வில்லையின் குவிய நீளம்

1) 14.0 cm 2) 14.3 cm
3) 14.6 cm 4) 14.9 cm
5) 30.0 cm

08) நிலையான அலையொன்றின் இயல்புகளைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A . பின்னடும் இரு கணுக்களுக்கிடையிலான துணிக்கைகள் ஒரே அவத்தையில் இருக்கும்.
B. சக்தி ஊடுகடத்தப்படும்.
C. வீச்சம் பூச்சியமாகவும், உச்சமாகவும் இருக்கக்கூடிய புள்ளிகள் உள்ளன. இக்கூற்றுக்களில் சரியானது - சரியானவை.

1) A 2) B 3) A,B
4) A,C 5) A,B,C


09) எளிய நுணுக்குக் காட்டியாக பாவிக்கப்படும் வில்லைக்கு மிக அண்மை யில் கண் இருக்கும்போது உருப்பெருக்க வலு உயர்வாக இருப்பதற்கு,

A . விம்பம் கண்ணின் அமைப்புப் புள்ளியில் இருக்கவேண்டும்.
B. பொருள் தலைமைக் குவியத்திற்கு சற்று உள்ளே இருக்க வேண்டும்.
C. வில்லையின் குவியத்தூரம் சிறிதாக இருத்தல் வேண்டும்.
இக்கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை.


1) A 2) B 3) A,B
4) A,C 5) A,B,C

10) கார் ஒன்று மாறா ஆர்முடுகலுடன் இயங்கும்போது பெறப்பட்ட திக்கர் நாடாவை அருகிலுள்ள உரு காட்டுகின்றது. அதிரியின் அதிர்வெண் 20 Hz தொடர்ந்து வரும் பொட்டுகளுக்கிடைப்பட்ட தூரங்கள் முறையே 1 cm, 2 cm, 3 cm எனின் காரின் ஆர்முடுகல்,

1) 2 $ms^{-2}$ 2) 4$ms^{-2}$ 3) 6 $ms^{-2}$
4) 8 $ms^{-2}$ 5) 10 $ms^{-2}$




11) 2 kg திணிவும் 1000$kgm^{-3}$ அடர்த்தியும் உடைய ஒரு திண்மப்பொருள் இழையொன்றினால் தொங்கவிடப்பட்டுள்ளது. பொருளை படிப்படியாக நீரினுள் அமிழ்த்தும்போது நீரினுள் அமிழ்ந்திருக்கும் கனவளவு V உடன் இழையின் இழுவை T இன் மாறலை திறம்படக் காட்டுவது.




12) கிரிக்கெட் துடுப்பு ஒன்று அதனது புவியீர்ப்பு மையத்தினூடாக செல்லும் கோட்டினூடு படத்தில் காட்டியவாறு வெட்டப்படுகின்றது.

1) இரண்டு துண்டுகளும் ஒரே திணிவைக் கொண்டிருக்கும்.
2) கீழே உள்ள துண்டு அதிக திணிவைக் கொண்டிருக்கும்.
3) கைப்பிடியுடனான துண்டு அதிக திணிவை கொண்டது.
4) கைப்பிடியுடனான துண்டின் திணிவு கீழ்த் துண்டினது திணிவிலும் இரு மடங்காகும்.
5) கைப்பிடியின் நீளத்திற்கு ஏற்ப திணிவுகள் வேறுபடும்.




13) பொருள் ஒன்று எறியப்படும்போது அதன் அதியுயர் உயரமும், கிடை வீச்சும் சமனாயின் நிலைக்குத்து வேகக்கூறு $V_2$ இற்கும், கிடை வேகக் கூறு $V_1$ இற்கும் இடையிலான விகிதம்

$V_2/V_1$ ஆனது,

1) 1 2) 2 3) 4 4) $\sqrt{2}$ 5) 2

14)




ஒரே தடவையில் ஓர் 50 Hz சைகையையும் மீடிறன் f (f >50Hz) ஐ உடைய வேறொரு சைகையையும் உருவாக்குகின்ற ஒரு நுணுக்குப் பன்னியுடன் ஓர் அலைவுகாட்டி தொடுக்கப்பட்டுள்ளது. உரு A ஆனது 50 Hz சைகையுடன் மாத்திரம் உள்ள சுவட்டினையும், உரு B ஆனது சேர்ந்த சைகையின் விளைவாக உள்ள சுவட்டினையும் காட்டுகின்றன. f இன் பெறுமானம்

1) 50 Hz 2) 55Hz 3) 60 Hz
4) 65 Hz 5) 70 Hz

15) புவியின் புற அகணி திரவத்தினால் ஆனது என்று நடுக்கவியலாளர்கள் முடிவுக்கு வரக் காரணமாக அமைந்த அலை.

1) P அலைகள் 2) S அலைகள் 3) லவ் அலைகள்
4) றேலி அலைகள் 5) சுனாமி அலைகள்

16) பொருள் ஒன்று -32C என்னும் பெறுமானத்திற்கு மின்னேற்றப்படுகின்றது. இலத்திரனின் ஏற்றம் $-1.6 \times 10^{-19}$ C இற்குச் சமனெனின். அப்பொருளில் இருக்கும் மிகையான இலத்திரன்களின் எண்ணிக்கை,


1) 0 2) $10^{-19}$ 3) $2x10^{-19}$
4) $10^{20}$ 5) $2x10^{20}$

17) 12 m நீளமும் 6 kg திணிவுமுடைய ஓர் சீரான இழையானது நிலைத்த வளை ஒன்றிலிருந்து தொங்கவிடப்பட்டு அதன் கீழ் முனையிலே 2 kg திணிவு இணைக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் முனையிலிருந்து 0.05 m அலைநீளமுடைய

ஓர் குறுந்துடிப்பானது மேல்நோக்கி செலுத்தப்படுகின்றது. துடிப்பான மேல் முனையை அடையும்போது அதன் அலைநீளம்

1) 0.025m 2) 0.05 m 3) 0.10m
4) 0.20 m 5) 0.25 m

18) 1 m ஆழமுள்ள நீர்த்தடாகத்தினுள் ஒரு கம்பம் நிலைக்குத்தாக வைக்கப்பட்டுள்ளது. நீர் மட்டத்திற்கு மேல் அதனுயரம் 1 m ஆகும். நீரின் முறிவுச்சுட்டி $\sqrt{2}$ ஆக உள்ளபோது சூரிய ஒளியானது கிடையுடன் $45^0$ இல் விழும் சந்தர்ப்பத்தில் தடாகத்தின் அடியில் உண்டாகும் நிழலின் நீளம்





(1) 1m (2) $\left(1+\frac{1}{\sqrt{2}}\right)m$

(3) $\left(1+\frac{1}{\sqrt{3}}\right)m$ (4) $\left(1+\sqrt{3}\right)m$

(5) $\left(1+2\sqrt{3}\right)m$

19) ஒவ்வொன்றும் f குவிய நீளமுடைய இரு குவிவு வில்லைகள் படத்தில் காட்டியவாறு ஓரச்சுடையதாக 20 cm வேறாக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு வில்லையிலிருந்து 10 cm தூரத்தில் வைக்கப்பட்ட பொருள் O இற்கு தோன்றும் இறுதி விம்பம் I ஆனது மறு வில்லையிலிருந்து 10 cm தூரத்தில் உருவாக்கின்றது எனின் f இன் பருமன்,





1) 2.5 cm 2) 5.0 cm 3) 10.0 cm
4) 20.0 cm 5) 40.0 cm

20) கூட்டு நுணுக்குக்காட்டி ஒன்று 3 cm, 4 cm குவிய நீள குவிவு வில்லைகளைக் கொண்டுள்ளது. பொருளியிற்கு முன்னால் 4 cm இலுள்ள பொருள் ஒன்று கருவியினூடு அவதானிக்கப்படுகின்றது. இறுதி விம்பம் முடிவிலியில் உண்டாகுமாறு அது செப்பம் செய்யப்பட்டுள்ளது. வில்லைகளுக்கிடைப்பட்ட தூரம்.

1) 7 cm 2) 12 cm 3) 16 cm
4) 20 cm 5) 17 cm

21) இரு சர்வசமனான ஏற்றிய கோளங்கள் சமநீளமுடைய இரு இழைகளினால் தொங்கவிடப்பட்டு உள்ளன. இழைகளுக்கிடையில் ஆக்கும் கோணம் 2 θ ஆகும். இப்போது இக்கோளங்கள் அடர்த்தி σ வை உடைய திரவம் ஒன்றினுள் அமிழ்த்தப்படும் போது அதேகோணங்களை மீண்டும் அமைக்கின்றன. கோளத்தின் அடர்த்தி d எனின், திரவத்தின் மின்னுழைய மாறிலிக்கான கோவையை தருவது,





1) $\frac{\sigma}{d}$ 2) $\frac{d-\sigma}{d}$ 3) $\frac{d}{d-\sigma}$ 4) $\frac{d}{\sigma}$ 5) $\frac{\sigma}{d}-1$

22) f குவியத்தூரமுடைய ஒருக்கு வில்லை ஒன்றின் உண்மை விம்பத்திற்கு பொருள்தூரம் u. விம்பத்தூரம் v ஆகும். u இற்கு எதிராக (V +u) வரைபை வரைந்தால் (V = U) இற்காக பெறப்படும் இழிவுப்பெறுமானம்,

1) f 2) 2f 3) 4 f
4) $f^2$ 5) $f^2 + 2f$

23) பாத்திரமொன்றினுள் கொள்ளப்பட்டுள்ள திரவம் ஒன்றின் மீது பொருள் ஒன்று மிதக்கின்றது. காட்டப்பட்ட தொகுதியானது ஈர்ப்பின் கீழ் விழவிடப்படுகின்றது. திரவத்தினால் அப்பொருளுக்கு கொடுக்கப்படும் மேலுதைப்பு,




1) பூச்சியமாகும்
2) இடம்பெயர்ந்த திரவத்தின் நிறைக்குச் சமனாகும்.
3) வளியிலுள்ள பொருளின் நிறைக்கு சமனாகும்.
4) பொருளின் அமிழ்ந்துள்ள பகுதியின் நிறைக்கு சமனாகும்
5) பொருளின் அமிழாத பகுதியின் நிறைக்கு சமனாகும்.

24) உலோகப் பந்து ஒன்றின் வெப்பநிலை $30^0C$ இனால் அதிகரிக்கப்பட்ட போது, அதன் கனவளவு 0.18% இனால் அதிகரித்தது. பந்து ஆக்கப்பட்ட அவ் உலோகத்தின் ஏகபரிமாண விரிகைத்திறன்,

1) $1 \times 10^{-5} K^{-1}$ 2) $2 \times 10^{-5} K^{-1}$ 3) $3 \times 10^{-5} K^{-1}$
4) $4 \times 10^{-5} K^{-1}$ 5) $5 \times 10^{-5} K^{-1}$

25) கிடைப்பரப்பொன்றின் மீது ஓய்விலுள்ள M திணிவுடைய குற்றியொன்று உருவில் காணப்படுகின்றது. அக்குற்றியுடன் பொருத்தப்பட்டு ஒப்பமான கப்பியின் மீதாகச் செல்லும் இலேசான வடம் ஒன்றினது மறு அந்தத்தில் இருந்து m திணிவுடைய சிறுவன் ஒருவன் ஏறுகின்றான். மேற்பரப்பிலிருந்து குற்றி தூக்குப்படுவதற்கு அச்சிறுவன் கொண்டிருக்கவேண்டிய இழிவு ஆர்முடுகல்





(1) $\frac{M}{m}g$ (2) $\frac{m}{M}g$

(3) $\left(\frac{m}{M}+1\right)g$ (4) $\left(\frac{M}{m}+1\right)g$

(5) $\left(\frac{M}{m}-1\right)g$

## பகுதி - A




01) PQR உராய்வற்ற சுழலிடம் Q இல் ஈர்ப்பு மையத்தினை கொண்ட 40 cm நீளமுடைய மெல்லிய மரத்தாலான வளையும், AB - மெல்லிய உலோகக் கம்பியும், 5 mm அளவிடையும் ஆகும். மெல்லிய கம்பி வடிவில் அமைந்த உலோகத்தின் நீளவிரிகைத்திறன் துணிவதற்கான நெம்பு கோல் முறை ஒன்றின் அமைப்பு அருகில் காட்டப்பட்டுள்ளது. AB இன் நீளம் 50 cm ஆகும். இது B இல் விறைப்பாக பொருத்தப்பட்டுள்ளது. வன்மையான இறப்பர்க் குழாயினூடு நீராவியினைச் செலுத்தி கோல் விரியும்போது P இனை மேல் நோக்கித் தள்ளும்போது அளவிடையில் ஏற்படும் மாறலைக் கொண்டு விரிவுகளைக் காணப்பட வேண்டி உள்ளது. ஆரம்பத்தில் PQR கிடையாக உள்ளது.

a. மரத்தாலான வளையின் புவியீர்ப்பு மையம் சுழலிடம் Q இல் இருப்பதால் நன்மை யாது?

---

b. கம்பியினை சூடாக்குவதற்கு நீராவி X இனூடாகவா, Y இனூடாகவா செலுத்துவீர்? காரணம் தருக.

---

c. இப்பரிசோதனையின் நீளவிரிவு காண்பதற்கான படிமுறைகளை சுருக்கமாகத் தருக.

i. ---
ii. ---
iii. ---

d. நீராவியினைச் செலுத்த முன்னர் நீர் எடுக்கும் வாசிப்புக்களை தருக.

i. ---
ii. ---

e. நீராவியினைச் செலுத்திய பின்னர் நீர் எடுக்கும் வாசிப்புக்களைத் தருக.

i. ---
ii. ---

f. வாசிப்பு (e) இனைப் பெறும்போது நீர் முக்கியமாகப் பேண வேண்டியது (கருதுவது) யாது?

g. இப் பரிசோதனையில் ஆரம்ப வெப்பநிலை $28^0C$ இறுதி வெப்பநிலை $98^0C$ ஆக காணப்பட்டது. PQ =5 cm ஆக இருக்கும்போது அளவிடையில் 4 mm அசைவு பெறப்படும்.

1. கோலில் பெறப்படும் நீளவிரிவு யாது?

2. இதிலிருந்து கோலின் நீளவிரிகைக் குணகம் யாதாக அமையும்.

h. வழக்கமான சூடு காட்டல் பரிசோதனையில் கொதி நீரைப் பயன்படுத்துவதனைவிட, கொதி நீராவி பயன்படுத்துவதால் மூன்று அனுகூலங்களைத் தருக.

# தமிழகத்திற்கு காவிரி நீர்வழங்க கர்நாடகம் மீண்டும் மறுப்பு



நேற்று இடம்பெற்ற கண்கா ணிப்புக்குழுக் கூட்டத்தில் காவிரி யில் இருந்து தண்ணீர் விட கர் நாடகம் மறுப்புத் தெரிவித்துள் ளது. தமிழகம் - கர்நாடகம் இடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசு வர்த்தமானியில் வெளி யிட தாமதித்து வந்தது. இதை யடுத்து முதல்அமைச்சர் ஜெய லலிதா உத்தரவின் பேரில் தமிழக அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசி தழில் வெளியிட நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து மத்திய அரசிதழில் வெளியிடப் பட்டது. இதை அமுல்படுத்த காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். ஆனால மத்திய அரசு இதிலும் காலம் தாழ்த்தியதால் தமிழக அரசு மீண்டும் நீதிமன்றத்தை அணுகியது.

கர்நாடகத்தில் தேர்தல் நடந் ததால் கண்காணிப்புக் குழு அமைக்கும் பணி நிறுத்திவைக் கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்தது.

தேர்தல் முடிந்த பின்பும் கண்காணிப்புக் குழு அமைக்கப் படவில்லை. இதைத்தொடர்ந்து தற்காலிகமாக காவிரி மேற் பார்வைக் குழுவை நீதிமன்றம் நியமித்தது. இதன் கூட்டத்தை நேற்று கூட்டவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி தற்காலிக காவிரி மேற்பார்வைக் குழுவின் முதற் கூட்டம் டில்லியில் நேற்று குழுத் தலைவரான மத்திய நீர்வளத் துறை செயலாளர் எல்.கே. சர்க் கார் தலைமையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் தமிழக அர சின் தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் மற்றும் பொதுப் பணித்துறை இயந்திர வியலாளர்கள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தியச் செய்திகள்

இதேபோல் கர்நாடகம், கேரளா மாநில தலைமைச் செய லாளர்கள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். தமிழகத்தில் காவிரி டெல்டா பாசனத்துக்காக ஜூன் முதல் வாரத்தில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

ஆனால் கர்நாடக அணை களில் இருந்து போதிய அளவு தண்ணீர் திறக்கப்படாததால் மேட்டூர் அணையின் பெரும்ப குதி வறண்டு தற்போது 18 அடி தண்ணீரே உள்ளது. (மொத்த உயரம் 120 அடி).

இன்றைய கூட்டத்தில் தமிழ கத்தில் குறுவை சாகுபடிக்காக உடனே தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும், ஜூன் மாதத் துக்கு காவிரியில் 10 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும் தமிழகம்தரப்பில் வற் புறுத்தப்பட்டது. மேட்டூர் அணை வறண்டதால் காவிரியில் கர்நாட கம் தண்ணீர் திறக்கப்படுவதை தமிழக விவசாயிகள் எதிர் பார்த்து இருப்பதாகவும் எடுத் துக் கூறப்பட்டது. தமிழகத்தில் தற்போது நிலவும் நிலையை தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் பேசுகையில் விரிவாக எடுத்துக்கூறினார். இதற்கு கர்நாடகம் தரப்பில் அம் மாநில தலைமைச் செயலாளர் பதில் அளித்துப் பேசுகையில், 'தற்போதைய நிலையில் தமிழ கத்துக்கு தண்ணீர் தரமுடியாத நிலையில் இருக்கிறோம் என்று கூறி கைவிரித்து விட்டார்.



**தமிழ்நாடு ஏற்காடு கோடை விழாவையொட்டி, அண்ணா பூங்காவில், குழந்தைகளைக் கவரும் வண்ணம், மலர்களால் உருவாக்கப்பட்ட, டோரா கார்ட்டூன் பொம்மையின் உருவம்.**

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறா ரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை வழங்கிய கௌரவ பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்களுக்கும், வலிகாமம் பிரதேச ஈ.பி.டி.பி. இணைப்பாளரும், வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) அவர்களுக்கும், வலி.தென் மேற்கு பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், வலி.தென் மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) அவர்களுக்கும் எமது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் மக்கள் பணி மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.






சண்டிலிப்பாய் பிரதேசத்தில்
நியமனம் பெற்ற
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

(R/186)

# சிரியாவில் கிளர்ச்சியைத் தடுக்க ஜெனிவாவில் பேச்சுவார்த்தை



சிரியாவில் தொடரும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வர ஜெனிவாவில் வரும் 5ஆம் திகதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

சிரியாவில் நடைபெற்று வரும் கிளர்ச்சியை முடிவுக்குக்கொண்டு வர ஐ.நா. தீவிர ஏற்படுகளை செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக அமெரிக்க, ரஷ்யா மற்றும் ஐ.நா. அதிகாரிகள் பங்கேற்கும் பேச்சுவார்த்தை ஜெனிவா நகரில் 5ஆம் திகதி நடைபெறும்.

அதில் அமெரிக்கா சார்பில் துணை அமைச்சர் வெண்பி ஷெரமான், ரஷ்யா சார்பில் வெளியுறவு உதவி அமைச்சர் மிக்கேல் போஷாநோவ், ஐ.நா. சார்பில் ஜெப்ரி பில்த்மேன் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். இதன் பிறகு 7ஆந் திகதி நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜான் கெர்ரி, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செரோல் லாவரோவ் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.



ஈரானில் விரைவில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பல்வேறு கட்சிகளின சார்பில் போட்டியிடும் அதிபர் வேட்பாளர்கள்.

# விமானங்கள் நேருக்கு நேர் மோதல்; அமெரிக்காவில் மூவர் பலி

அமெரிக்காவின் அரிசோனா மாவட்ட தலைநகர் பீனிக்ஸ் அருகேயுள்ள பாலைவனப் பகுதியில் 2 விமானங்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 3 பேர் பலியாகி உள்ளனர். "டீர் வேல்லி" விமான நிலையத்தில் இருந்து மேற்கு-வடமேற்கு வான் எல்லையில் 15 மைல் தொலைவில் இந்த விபத்து நிகழ்ந்ததாக தீயணைப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஒற்றை இயந்தித்துடன் பறந்த 2 சிறிய விமானங்களும் தீப்பிடித்து எரிந்ததாகவும், விபத்தில் சிக்கி 3 பேர் பலியானதாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தன விபத்துக்கான காரணம் குறித்து விமான நிலைய அதி காரிகளும், பொலிஸாரும்



விசாரணை நடாத்தி வருகின்றனர். நடுவானில் மோதிக் கொண்ட விமானங்கள் தீப்பிழம்பாக மாறி பாலைவனத்தில் விழுந்து சிதறியதாக விபத்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினார்.

# செவ்வாய்க்குச் செல்லும் வீரர்கள் கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாகலாம்




செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லக்கூடிய விண்வெளி வீரர்கள் எதிர்காலத்தில் கூடுமையான கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாக நேரிடும் என்று அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா எச்சரித்துள்ளது. பாதுகாப்பு விதிமுறைகள் உடன்படும் அளவைவிடக் கூடுதலான அளவுக்கு அங்கு கதிர்வீச்சுத் தாக்கத்துக்கு விண்வெளி வீரர்கள் இலக்காக நேரிடும் என்று நாஸா கூறுகிறது.

உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய புற்றுநோய்களுக்கான அபாயத்தை அதிகரிக்கக்கூடிய அளவில் இந்த கதிர்வீச்சு இருக்கும் என்றும் விண்வெளி வீரர்களை நாஸா எச்சரித்துள்ளது. கியூரியாசிட்டி ரோவர் விண்ணூர்தியைக் கொண்டு நடாத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் மூலம் இதனை நாஸா உறுதிப்படுத்தியுள்ளது.

செவ்வாயின் தரையில் ஊர்ந்து சென்று ஆய்வு நடாத்திய ஒருகார் அளவிலான இந்த ரோபோ- ஊர்தியை அங்கு கொண்டு செல்லும் அரை-பில்லியன் கிலோமீட்டர் தூர பயணத்துக்கு 8 மாதங்களுக்கும் அதிக காலம் எடுத்துள்ளது.

இந்தப் பயணத்தை கிழமைகள் கணக்கில் விரைவு படுத்து வதற்கு போதுமான உந்துசக்திக்கான தொழி நுட்பவசதி இன்னும் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உலகச் செய்திகள்

# சீனாவை மீண்டும் தாக்கும் பறவைக் காய்ச்சல் நோய்

பறவைக் காய்ச்சலால் சீனாவில் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. சீன நாட்டின் ஷாங்காய் நகரில், கடந்த பெப்ரவரி மாதம் 27 மற்றும் 87 வயதுடைய இருவர் பறவைக் காய்ச்சலுக்கான எச்7 என்9 என்ற அறிகுறியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தவகைக் காய்ச்சல் இதுவரை மனிதர்களுக்குப் பரவவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஆயினும் இந்த நோயாளிகள் இருவரும் சில வாரங்களில் இறந்துபோயினர்.

இந்நிலையில், பறவைக் காய்ச்சல் நோய்க்காக ஷங்காய்



வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஷென்(59) என்பவர சிகிச்சை பலனின்றி, நேற்று முன்தினம் உயிரிழந்தார். சீனாவில் 131பேருக்கு பறவைக்காய்ச்சலுக்காக சிகிச்சை அளிக்கப்பட்டது. இவர்களில் 38 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டு முதல், எச்5 என்1 என்ற வைரஸ் கொண்ட பறவைக் காய்ச்சலால், 360இற்கும் மேற்பட்டோரும், கோடிக் கணக்கான பறவையினங்களும் அழிந்தன. என்று புள்ளிவிவரக் கணக்கீடுகள் கூறுகின்றன. ஆனால், நோய்த்தொற்று பரவிய பண்ணைகளுடன் தொடர்பு வைத்திருந்த மக்களே, பறவைக் காய்ச்சலால் பாதிப்புக்கு உள்ளாயினர் என உலக சுகாதரக் கழகம் தெரிவித்தது.

# மீண்டும் துளிர் விடுகிறது 400 ஆண்டு பழைய மரம்

கனடா நாட்டின் பனிப்பாறைகளில், 400 ஆண்டுகளுக்கு முன் புதைந்த மரத் தண்டுகளில், தற்போது வளர்ச்சி காணப்படுவதாக, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கனடா நாட்டின், அல்பர்டா பல்கலைக்கழக ஆய்வாளர்கள், பிரிட்டன் ஆய்வாளர்களுடன் இணைந்து, பனிப்பாறைகளில் புதையுண்ட மரங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கனடாவில், வெப்பம் காரணமாக, பனிப்பாறைகள் வேகமாக உருகி வருவதால்; அப்பகுதியில், பல நூறு ஆண்டுகளுக்கு முன் புதைந்த மரங்கள், தற்போது வெளியில் தெரிகின்றன. ஆய்வாளர்களின் தேடலில், 400 ஆண்டுகளுக்கு முன் புதைந்த, மரத்தின் தண்டுப் பகுதி கிடைத்தது. இதைப் பிரிட்டன் ஆய்வகத்தில் ஆய்வுக்கு உட்படுத்தியபோது, அதில் புதிய கிளைகள் முளைத்தன.

இதுகுறித்து, ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்ததாவது;

கனடாவில், 400 ஆண்டுகளுக்கு முன் புதைந்த மரத்தின் தண்டுப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இவை, "பிராயோர்பையிட்ஸ்" என்று அழைக்கப்படுகின்றன. இவ்வகை மரங்கள், வெட்டுப்பட்ட பின்னும், உயிர் வாழ்கின்றன. பனிப்பாறை இடுக்கில் சிக்கிக் கொள்வதால், இதன் வளர்ச்சி தடைபடு



கிறது. சாதகமான தட்பவெட்ப நிலை நிலவும் போது, மீண்டும் வளர்கின்றன.

ஆய்வகத்தில், தகுந்த தட்பவெட்ப நிலை கிடைத்ததால், தண்டு மீண்டும் வளரத் துவங்கியுள்ளது. இவ்வகை மரங்கள், தரையில் வளரும், சாதாரண மரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை.

இதில், வேஸ்குலர் திசுக்கள் இல்லாததால், மரத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றப் பகுதிக்கு, உணவு பரிமாற்றத்தில் தடை ஏற்படுகிறது. மரத்தின் ஒவ்வொரு பகுதியும், தனக்கான உணவை தானே தயாரித்துக் கொள்கிறது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

# தலைப்பாகையுடன் பணியாற்ற அயர்லாந்தில் சீக்கியருக்கு தடை


கடமையின் போது சீக்கியர்கள் தலைப்பாகை அணியக் கூடாது என்ற அதிரடித் தீர்ப்பை அயர்லாந்து நீதிமன்றம் வழங்கியுள்ளது. அயர்லாந்து நாட்டின் சட்டங்களால் இந்தியாவை சேர்ந்த பல் டொக்டர் சவீதா ஹல்பனாவர் பிரசவத்தின் போது பலியான சோகம் ஆறுவதற்குள் இந்த அதிரடித் தீர்ப்பை அயர்லாந்து நீதிமன்றம் வழங்கியுள்ளது. அயர்லாந்து பொலிஸாருக்கு உதவியாக "கர்டா ரிசர்வ்" என்ற தன்னார்வலத் தொண்டர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் படையில் சீக்கியரான ரவீந்தர் சிங் ஓபராய் பயிற்சி பெற்று வந்தார்.

பயிற்சியின் 3 நிலைகளிலும் அவரை தலைப்பாகையுடன் பயிற்சிபெற அனுமதித்த உயரதிகாரிகள் பணியில் சேரும்போது, சீருடையின் அழகைப் குலைப்பதால் தலைப்பாகை அணியக் கூடாது என்று கூறி தடை விதித்தனர்.

இதனையடுத்து, அயர்லாந்து நாட்டின் சமஉரிமைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் ஓபராய் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி கெவின் .'.பீனே, சீருடைக்கு இடையூறாக இருக்கும் சீக்கிய தலைப்பாகை அணிந்து பணியாற்றக் கூடாது என தீர்ப்பளித்தார்.

# வறுமையில் வாடும் மக்களுக்கு கைகொடுத்து பணிசெய்யுங்கள்

## புதிய சமுர்த்தி அலுவலர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

இன்று நியமனம் பெறும் நீங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு பயனுள்ள வகையில் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்திட உங்களது சேவையை வழங்கவேண்டும் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். குடாநாட்டின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வூதியம் கிடைக்கக்கூடிய ஓர் அரச உத்தியோகம் உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. அந்த வகையில் உங்களது வாழ்க்கைத்தரத்தை வளம்படுத்துவதுடன் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட சேவையாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த வாழ்வெழுச்சி திட்டத்தை சட்டமாக்குவதற்கு பல நெருக்கடிகள் இருந்துவந்தது. அதில் ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டியிருந்த எதிர்பபாகும் என்றும் தெரிவித்த அமைச்சர், இவ்வாறு எதிர்ப்புக் காட்டி மக்களை கஷ்டத்துக்குள்ளாக்கி சுயலாப அரசியல் நடத்துவதே அவர்களின் நோக்கமாகும்.

அன்று யாழ். பல்கலைக்கழக வளாகம் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டபோது அதற்கு எதிராக குரல் கொடுத்தவர்களும் இவர்களே. இவர்கள் பல்கலைக் கழக வளாகம் வேண்டாம். பல்கலைக்கழகமே வேண்டும் என்று கூறி எதிர்ப்புக் காட்டினர். இருந்தும் பல்கலைக்கழக வளாகமாக உருவாக்கப்பட்டதுதான் இன்று யாழ். பல்கலைக்கழகமாக உருவாகியிருக்கின்றது.

அதுபோலவே இந்த வாழ்வெழுச்சி சட்டமூலத்தை எதிர்த்தனர். இருந்தும் அது இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு வடக்கில் சுமார் ஒரு இலட்சம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் பயன் பெறும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச ஊழியர்களாக நிரந்தர நியமனம் ஓய்வூதியம் பெறும் விதத்தில் பயனடைந்துள்ளனர். எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திடம் எங்களது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

13 ஆவது அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அன்றிலிருந்து இன்று வரை வலியுறுத்தி வருகின்றோம். படையினருக்கு காணி கொடுக்கவேண்டிய தேவையும் இருக்கின்றது.

சுயலாப அரசியல்வாதிகள் போன்று முற்றுமுழுதாக காணியே தரமுடியாது என்று சொல்லிவிடமுடியாது. இந்நிலையை கடந்தகால அரசியல் தலைமைகளே ஏற்படுத்தியிருக்கின்றன.

அப்படி ஏமாற்று அரசியல் நடத்தவேண்டிய தேவையும் இல்லை என்று தெரிவித்ததுடன், வருகின்ற சந்தர்ப்பத்தை நீங்கள் சரியாகப் பயன்படுத்தினால் சரியானவர்களை தெரிவு செய்தால் வடக்கு மாகாணத்தை வளம்கொழிக்கும் பூமியாக வரும் 3 முதல் 5 வருடங்களில் மாற்றிக்காட்டுவோம் என்றும் தெரிவித்தார்.

மேலும் வடக்கில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஷபக்ஷவுக்கும் தமது நன்றியை இதன்போது அமைச்சர் தெரிவித்துக்கொண்டார். (பா)

### வடக்கில்...

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் 331 பேருக்கும், கிளிநொச்சியில் 178 பேருக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சமுர்த்தி திட்டம் அமுல்படுத்தப்பட்டு அந்தத் திட்டம் முதன் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடுமையாக உழைத்திருக்கின்றார்.

சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதெல்லாம் சமுர்த்தி விடயம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் பயனாகவே இன்று நீங்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெறுகின்றீர்கள். எனவே அரசின் எதிர்ப்பார்ப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விருப்பத்திற்கு அமைவாகவும் இந்தப் பிரதேச மக்களின் வறுமையொழிப்பு திட்டத்திற்கு அர்ப்பணிப்புடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

### சமுர்த்தி...

தேசியக்கொடியேற்றல், மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின், மு.சந்திரகுமார், ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல், சமுர்த்தி பணிப்பாளர் திலகசிறி, யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன் ஆகியோர் சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனத்தில் முன்னின்று செயற்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அளப்பரிய சேவை குறித்து பேசியதுடன் இந்நியமனத்தின் மூலம் வடக்கு மக்களுக்கு கிடைத்திருக்கும் நன்மைகளுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஷபக்வுக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதம விருந்தினர் உரையையடுத்து அவர் நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் அதிதிகளும் இந்நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தனர்.

நேற்று முதல் கட்டமாக 251 பேருக்கு இவ்வாறு நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

### இனங்களுக்கிடையில்...

குறித்து இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினர், ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கியுள்ளனர்.

### கவுணாவத்தையில்...

வேள்வியில் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆட்டுக்கடாக்கள் அதிகாலையில் உழவு இயந்திரங்கள் மற்றும் லாண்ட் மாஸ்டர்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டன.

இதனை விட சுமார் 300 இற்கும் மேற்பட்ட சேவல்களும் பலியிடப்பட்டன. இந்த நிகழ்வில் சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொணடனர். (93,01)

### முள்ளியவளை..


(வயது - 30) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இவர்கள் மீது மோதிய வானில் அகப்பட்டவரின் சடலம் 300 மீற்றர் தூரம் வரையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான வாகனத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தினுள் நிறுத்தியதுடன் வாகனத்தில் வந்தவர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

இவ்விபத்துக் குறித்து முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (125)

# தொழிற்சங்கவாதிக்கு பொன்விழா நல்லூரில் நேற்று கோலாகலம்



(திருநெல்வேலி)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் சரா.புவனேஸ்வரனின் சரா பொன் விழா, மாணவர் கௌரவிப்பு விழா, நூல் வெளியீட்டு விழா ஆகியன நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு எஸ். ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பேராசிரியர் க.தேவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், டாக்டர் லயன் வை.தியாகராஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வீ.ரி.சகாதேவராஜா, தொழிலதிபர் எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க விழா மேடை வரை அழைத்துவரப்பட்டனர். மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை என்பவற்றையடுத்து தலைமையுரை இடம்பெற்றது.

வெற்றித் தேர்வு சுற்றாடல் சார் செயற்பாடுகள் நூலினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை வெளியிட்டு வைக்க சிரேஷ்ட விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் அதனைப் பெற்றுக்கொண்டார். பரீட்சையில் உயர்பேறு பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.

வாழ்த்துரைகளை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளர் பி.என்.சுதர்சன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பிரசார செயலாளர் அன்ரனி மடுத்தீன் உட்பட மற்றும் பலர் வழங்கினர்.

பொன்விழா மலரை பேராசிரியர் க.தேவராசா வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை சட்டத்தரணி சி.புலேந்திரன் பெற்றுக் கொண்டார். விழா நாயகனும், பாரியாரும் பொன்னாடை போர்த்தப்பட்டு மாலைகள் அணிவித்து பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். விழா நாயகன் சரா புவனேஸ்வரன் ஏற்புரை நிகழ்த்தினார். (137)

### வலி.வடக்கு...

கூட அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது.

வடக்கில் இராணுவம் கைப்பற்றி இருந்த காணிகளில் தேவையான காணிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு சுமார் 12 ஆயிரம் ஏக்கர் காணிகள் அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### புலனாய்வு...

ஆதரவான சக்திகள் நாட்டைப் பிரிப்பதற்கு முனைப்புக் காட்டி வருவதாக தாய்லாந்துப் பிரதமரிடம் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் தகவல்கள் தொடர்பில் தாய்லாந்தும், இலங்கையும் இணைந்து செயற்பட வேண்டும் என யிங்லக் ஷினவாத்ராவிடம் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தமைக்காக தாய்லாந்துப் பிரதமருக்கு ஜனாதிபதி மகிந்த் ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளில் தாய்லாந்து முதலீட்டாளர்கள் முதலிடுவது தொடர்பிலும் இச்சந்திப்பில் தாய்லாந்துப் பிரதமரிடம் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையில் சுற்றுலா, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் வங்கி சார்ந்த உறவுகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது தொடர்பில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அத்துடன் தாய்லாந்து அரச அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான நுழைவு அனுமதி பெறும் முறையை இரத்துச் செய்வது தொடர்பிலும் இச்சந்திப்பில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் பிரதமர் டி.எம்.ஜயவர்த்தன, அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், பசில் ராஜபக்ஷ, ராஜித சேனாரத்ன, டக்ளஸ் தேவானந்தா, சம்பிக்க ரணவக்க, நிருபமா ராஜபக்ஷ, றிசாத் பதியுதீன், பிரியங்கார ஜயரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம, நிதியமைச்சின் செயலாளர் பி.ஜெயசுந்தர மற்றும் தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் ஜெனரல் எஸ்.எச்.எஸ்.கொட்டஹொட ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

# பின்லேடன் மீதான "ஒபரேசன்"

# யாழ். அறிஞரே தொழில்நுட்ப உதவி

(வொஷிங்டன்)

ஒசாமா பின்டேலனை கொலைசெய்வதற்கு உதவிய தொழில்நுட்பத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அறிஞர் ஒருவரே கண்டுபிடித்து உதவியுள்ளார்.

அல்-குவைதா அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் ஒசாமா பின்லேடனை கொலை செய்யும் அமெரிக்காவின் திட்டத்தில், இவர் பிரதான மூளைசாலியாக செயற்பட்டவர், பேராசிரியர் சிவலிங்கம் சிவநாதன் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், இந்த வெற்றிகரமான நடவடிக்கையை அடுத்து, வெள்ளை மாளிகையினால் மாற்றத்திற்கான விசேட நபர் என கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி இலங்கை பேராசிரியருக்கு மதிப்பளிக்கும் வகையில் வெள்ளை மாளிகையில் வழங்கப்பட்ட விருதினை அடுத்தே இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

அமெரிக்க பிரஜைகளை உலகில் சிறந்த மற்றும் முக்கியமான பிரஜைகளாக மாற்றுவதற்கு தமது அறிவை பயன்படுத்துபவர்களுக்கு இந்த கௌரவ விருது வழங்கப்படுவதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உள்ள இலினோயிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றி வரும் சிவலிங்கம் சிவநாதன், அல் - குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனை கண்டுபிடிக்கும் நடவடிக்கைக்குத் தேவையான தொழில்நுட்பத்தை முழுமையாக கண்டுபிடித்துள்ளார். இந்த நடவடிக்கைக்குத் தேவையான நைட் விஷன் தொழில்நுட்பம் உள்ளிட்ட உபகரணங்களை பேராசிரியரே தயாரித்துள்ளார்.

பேராசிரியர் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்காவின் பிரதான தொழில்நுட்ப அதிகாரி டோட் பார்க், இப்படியான அறிவார்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வந்து தாம் அவர்களுடன் பணியாற்ற கிடைத்தமை மதிப்புக்குரியது எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரி பிரதேசத்தில் பிறந்த பேராசிரியர் சிவலிங்கம், அணுமின் தொழில்நுட்பம் தொடர்பில் புகழ் பெற்றவர். அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் அவருக்கு சகல வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது தமது கடமை எனவும் அவர் கூறியுள்ளார்.

# பல்கலை மாணவர் மீது கண்ணீர் புகை

## சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் களேபரம்

## மாணவர்கள் அறுவர் கைது

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டு வீசியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் அறுவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தால் தடைப்பட்டிருந்த பதுளை - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து தற்போது சீர்செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சப்ரகமுவ மாணவர்கள் சிலருக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை தடையை நீக்குமாறு கோரி கடந்த 28 ஆம் திகதி நான்கு மாணவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

அதில் இரண்டு மாணவர்கள் நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதனையடுத்து அங்கு திரண்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்புகை குண்டு பிரயோகித்துள்ளனர்.

(மற்றுமொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

# கிணற்றில் வீழ்ந்த சிறுவன் மரணம்

(கிளிநொச்சி)

வீட்டில் விளையாட்டிக் கொண்டிருந்த சிறுவன் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி செல்வா நகரில் இடம்பெற்றுள்ளது.

பேரின்பராசா கவியரசன் (வயது - 2) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வீட்டில் தகப்பன் உறங்கிக் கொண்டிருந்த வேளை விளையாடிக் கொண்டிருந்த இச்சிறுவன் கிணற்றில் தவறி விழுந்துள்ளான்.

இச்சம்பவம் மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் குறித்து கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தனர். (ர)

# ஐ.தே.கட்சியின் அரசியல் யாப்பு மக்களின் ஆலோசனைக்கு



பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பாதுகாக்கும் அரசியல் அமைப்பு ஒன்றை தயாரிப்பது தமது கட்சியின் நோக்கம் என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிற்சங்கஙளுடன் நேற்று நுவரெலியாவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தமது நோக்கத்தை நிறைவுறுத்துவதற்காக கட்சியால் முன்வைக்கப்பட்ட யோசனை பொதுமக்கள் மத்தியில் கலந்தாலோசனைக்கு விடப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிகழ்வில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் உப தவிசாளர் கே.வேலாயுதம், இலங்கை சரித்திரத்தில் முதன்முறையாக அரசியல்யாப்பு மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# கட்டுநாயக்கவில் சீனப்பிரஜை கைது

(கொழும்பு)

72 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணத்துடன் சீனப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

61 வயதுடைய குறித்த நபர் இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். 886 என்ற விமானத்தில் பங்கொக் நோக்கிச் செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 12.35 அளவில் இவர் கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த நபர் முதல் முறையாக இலங்கைக்கு வந்துள்ளார் என கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# தெய்வ விக்கிரகங்கள் திருட்டு; புத்தூரில் திருடர்கள் கைவரிசை

(புத்தூர்)

ஆலயக்கதவினை உடைத்து விக்கிரகங்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இரவு புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இத் திருட்டுச்சம்பவம் வீரவாணி நாதன்பிரான் ஆலயத்தில் இடம்பெற்றதாக பிரதேச பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஆலய பூசகரால் மாலை பூசைகள் நடாத்தப்பட்ட பின்னர் கதவினை பூட்டிவிட்டு சென்றுள்ளார்.

மறுநாள் காலை பூசைகளை மேற்கொள்ள பூசகர் கோயிலுக்கு வந்து பார்த்த போது பூட்டு உடைக்கப்பட்டு திருட்டு போயுள்ளது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு சென்று பலமணி நேரமாக விசாரணைகளை மேற்கொண்டதுடன் சந்தேக நபர்களை கைதுசெய்ய பிரதேச மக்களின் உதவியினையும் வேண்டியுள்ளனர். (15)



யாழ்.குருநகர் வேழாங்கன்னி மாதா கோயில் திருவிழா நேற்று இடம்பெற்றது. இதன்போது திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதைக் காணலாம்.

# வடக்கு மாகாணத் தேர்தல்; ஆணையாளரின் அறிவிப்பு விரைவில்

(கொழும்பு)

உண்மையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டியது தேர்தல்கள் ஆணையாளரின் கடமையாகும். அவர் உரிய நேரத்தில் அதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நாங்கள் மிகவும் ஆரோக்கியமானதாகவே பார்க்கின்றோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் இளைஞர் விவகார அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மக்கள் சுதந்திர முன்னணி அரசு 13 ஆவது திருத்தம் குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. இந்நிலையில் விரைவில் ஆளும் கட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அதன்போது இந்த 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து பேச்சு நடத்தி தீர்வு காண முடியும் என்று நம்புகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். வடக்கு மாகாணசபைத் தேர்தல் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து தமிழ் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். அவ்வகையில் வடக்குத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும். உண்மையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டியது தேர்தல்கள் ஆணையாளரின் கடமையாகும். அவர் உரிய நேரத்தில் அதற்கான அறிவிப்பை வெளியிடுவார்.

வடக்குத் தேர்தலை நாங்கள் மிகவும் ஆரோக்கியமானதாகவே பார்க்கின்றோம். ஆளும் கூட்டணியில் உள்ள கட்சிகள் பல்வேறு யோசனைகளை வட்க்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவும் 13வது திருத்தச் சட்டம் குறித்தும் முன்வைத்துள்ளன. ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்க வில்லை. குறிப்பாக பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்கவேண்டும் என்று ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் கோரியுள்ளன.

ஆனால், ஆளும் கட்சியில் மேலும் சில கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் கைவைக்கக்கூடது என்று தேட்டுள்ளன. இந் நிலையில் ஆளும் கூட்டணியின் தலைவர்கள் கூட்டம் இறுதியாக கடந்த ஏப்ரல் மாதமே நடைபெற்றது. அதன் பின்னர் ஆளும் கட்சிக் கூட்டம் இதுவரை நடைபெறவில்லை. எனவே, விரைவில் ஆளும் கட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதன் போது 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில்

ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்துப் பேச்சு நடத்தி தீர்வுகாண முடியும் என்று நம்புகின்றோம். எத்தனையோ சர்ச்சைக்குரிய விடயங்களுக்கு எல்லாம் கடந்த காலங்களில் தீர்வு கண்டுள்ளோம். எனவே, வடக்கு மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் இந்த விவகாரங்களுக்கும் தீர்வுகாண முடியும் என்பது எமது நம்பிக்கையாகும் என்று தெரிவித்தார் அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

இபபததரிகை இல.373 பரதான வதி, யாழபபாணம என்னும முகவரியில அமைநதுள்ள அறபுதன அசசகததில 2013 யுன 02ஆம திகதி அசசிடடு வெளியிடபபடடுளளது.